99-100. ஸீதையோவென்றால் அதற்கஞ்சாது "அட பத்துத்தலைப் பூச்சியே! இதுவே என் எண்ணம். கருநிறங்கொண்ட தாமரை போன்று அழகான தாயும், யானையின் துதிக்கைக்கொப்பாயும் உள்ள ஸ்ரீ ராகவனின் கைகளோ அல்லது உன் பயங்கர வாளோ என் கழுத்தை அணிசெய்யட்டும். மூட! அது கண்டு என் உறுதி மாறாது என அறி" என்றாள்.

101-102. இன்னும் ஜானகி அம்மையார் ஜ்வலிக்கும் இராவணனது வாளை நோக்கி, "ஹே சந்திரஹாஸமென்ற வாளே! ராமனது பிரிவால் உண்டான தாபத்தைத் தணிப்பாய். உனது காந்தியோ பௌர்ணமி நிலவுக்கொப்பாய்க்குளிர்ச்சி

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

யாகக் காணப்படுகிறது. நீ என் தாங்கொணுத் துன்பத்தைத் தவிர்ப்பாயாக" என்று வாலியும் நோக்கிக் கூறினுள்.

108-105. இவ்வசனங்களைக் கேட்ட தசானன னும் ஸீதையைக் கொல்லத் தாவிச் சென்றுன். ஆனல் "பெண்களைக் கொல்வது நீதியன்று" என மய புத்ரியாகிய பட்டராணி மந்தோதரி கூறி அவனைத் தடுத்தாள். இவ்வாறு தடுக்கப்பட்ட இராவணன் எல்லா அரக்கியரையும் அழைத்து "ஒரு மாதத்திற்குள் என் வார்த்தைகளை ஸீதை கேட்கவேண்டும். இல்லையேல் இவ்வுடைவாள் அவளுயிரைக் குடித்துவிடும் என்று பலவாறு ஸீதையைப் பயமுறுத்துங்கள்" எனக் கட்டளை யிட்டான்.

106. இவ்வாறு தென்னிலங்கைத் தலைவன் கூறித்தன் அரண்மனையடைந்ததும் அரக்கியரனை வரும் பயங்கரத்தோற்றங்களுடனும் ஆயுதங்களுட னும், பிராட்டியைச்சூழ்ந்து பலவிதமாக பயு முறுத்தவும், ஹிம்சிக்கவும் ஆரம்பித்தனர்.

107-108. ஆங்கு பரம ஞானியாயும், பகவா னுடைய பாதபத்மங்களில் பக்தியுடையவளாயு

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

முள்ள த்ரிஜடையென்பாள் ராக்ஷஸிகளைத்தடுத்துத் தான் கண்ட கனவை அவர்களுக்குக் கூறினுள். நீங்கள் எல்லோரும் ஜகன்மாதாவாகிய ஜானகியைச் சரணடையுங்கள். அவளே நமக்குப் பரம மங்களத்தைச் செய்பவள். அவளுக்குப் பாத ஸேவை செய்து பரமானந்தமடைவோம்.

109-113. "இன்று நான் கனவில் கண்டதைக் கூறுகிறேன். ஒரு குரங்கு நம் இலங்கையைத் தீயால் பொசுக்கி, அசுர சைன்யங்களை ஸம்ஹாரம் செய்துவிட்டது. இராவணன் ஆடையின்றிக் கழுதையின் மேல் ஆரோஹணம் செய்து வருகிறுன். தலை முண்டனம் செய்யப்பட்டிருக்கிறது. கைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இவ்வலங்கோலத்துடன் தென்திசை நோக்கி விரைந்து செல்கிறுன். ஆனுல் இலங்கைச் செல்வம் விபீஷணனுக்குக்கிடைக்கிறது. நகரமெங்கும் ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தனம் இதற்கிடையே ஸீதாதேவி ஸமேதனுக ஸ்ரீ ராமன் காணப்படுகிறுர். இக்கனவு இன்னும் நான்கு தினங்களில் கட்டாயம் பலிக்கும். நன்கு அறிந்து கூறுகிறேன்" என்றுள் திரிசடை.

114-119. இக்கனவைக்கேட்ட ராக்ஷஸஸ்திரீகள் பயந்து நடுநடுங்கி ஸ்ரீஜானகீ மாதாவின் திருவடி

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

களுக்குத் தண்டனிட்டு நின்றார்கள். பின் அரக்கியர் ஒவ்வொருவராய் அங்கிருந்து கிளம்பித் தங்களிருப்பிடங்களைத் தஞ்சம் புகுந்ததும், ஸீதாதேவி "ஒரு மாதம் கழிந்ததும் பொல்லா ராக்ஷஸத்தலைவன் நம்மைக்கொன்றுவிடுவான்." எனத்திர்மானித்துத் திரிசடையை நோக்கி கைகுவித்துக் கூறலானாள். "ஏ தாயே நீ என் துன்பத்தில் பங்கு கொள்ளுபவள். என்னால் ஸ்ரீராமனது பிரிவைத்தாங்கமுடியவில்லை. எவ்வளவு சீக்ரமாய் என் உயிர் உடலைவிட்டு நீங்குமோ அவ்வுபாயத்தைச் செய்வாய். விறகுகளையடுக்கிச் சிதையைத்தயாரி. பின் அதற்குத் தீயிடு. ஹே பிரியமுள்ளவளே! என் அன்பை உண்மைப்படுத்து. ஏனெனில் காதுகளைக் குடையும் திரிசூலத்திற்கொப்பான கொடிய இராவணனது வசனங்களை யார்தான் கேட்டுச் சகித்துக்கொண்டிருப்பார்கள்.

120-121. இதைக்கேட்டதும் திரிஜடை காதுகளைப் பொத்திக்கொண்டு ஸீதையின் திருவடிகளை வணங்கி ஸ்ரீ ராமனுடைய பலம், பராக்ரமம், வீரதீரச் செயல்கள், குணங்கள், புகழ் இவைகளைக் கூறி அன்னையைத்தேற்றி மேலும் " அரசகுலச் செல்வீ! இந்த இரவில் நெருப்பு ஒருஇடத்திலும் கிடையாது.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

வீண் பரிச்ரமப்படாதே" என்று தன் மாளிகைக்கு கிளம்பினுள்.

122-126. திரிஜடை சென்றபின் மைதிலி, "ஏ! தெய்வமே. எனக்கு நீகூட பிரதிகூலமாயிருக்கிருயே. ஆகாயத்தில் நக்ஷத்திரக் கூட்டங்களாகிய நெருப்புக் கணங்கள் காணப்பட்டாலும் ஒன்றுகூட என் கையில் கிடைப்பதில்லே. ஒரு விண்மீன்கூட என் துன்பத்தைக் கண்டு தரையில் வந்து என்னை அடைவதில்லை. தண்மதியோ தகிக்கின்ருன் என்னை. அவனும் நான் பாக்கியமிழந்தவளென நினைத்து ஒரு அக்னி ஜ்வாலையைக் கீழே அனுப்புவதில்லை. ஹே! அசோக விருக்ஷமே! நீயாவது என் வேண்டுகோளைக் கேள். என் இன்னலைப் போக்குவதால் உன் பெயரை நிலைநாட்டு. உன் அழகிய இலைகளோ நெருப்புக்கொப்பாக இருப்பதால் அவைகளிலிருந்து ஒரு தீச்சுடரையளித்து என் சரீர யாத்திரையை முடிப்பாயாக" என்று வேண்டினுள்.

127. இவ்வாறு வருந்தித் துடிக்கும் ஸீதாப் பிராட்டியின் துயரைக் கண்ட ராமதாஸருக்கு ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு கல்பகாலமாகக் கழிந்தது.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

128. அச்சமயம் ஹனுமார் பலவாறு ஆலோசித்துப் பின் கணையாழியை, அன்னையின் திருவடிகளின் முன் ஸமர்ப்பித்தார். அக்னிப்பிழம்பாக ஒளிவிடும் கணையாழியை அன்னை கண்டு அசோகம் தன் வேண்டுகோளை நிறைவேற்றியதென நினைத்து மகிழ்ந்து, அதனைத் திருக்கரத்தினுல் ஆவலுடன் எடுத்துப் பார்த்தாள்.

129-131. மதுரமயமான ஜகன்மோஹன ஸ்ரீ ராமநாமத்தினுல் பொறிக்கப்பட்ட கணையாழியைக் கண்ட அன்னையின் ஆனந்தத்திற்கு அளவில்லை. பற்பல நினைவுகளையளித்தது அம்மோதிரம். ஒரு பக்கம் ஆனந்தம். ஒரு பக்கம் கவலை. இவ்விருவித உணர்ச்சிகளும் கலந்து அகத்தில் அலைமோதின. "என் நாதன் ஒருவராலும் ஜெயிக்கமுடியாத பெருவீரன். அரக்கர் மாயை இவ்வழகான கணையாழியை ஆக்க ஆற்றல் அற்றது" என்று எண்ணினுள் எழிலுடையாள்,

132. இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்ருகப் பலவாறு சிந்தனைகள் சித்தத்தைக்கலக்கும் தருணம் அனுமார் அன்னைமுன் மறைந்து நின்று இனிய மொழிகளை இயம்பலுற்ருர்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

133-134. சொல்லின் செல்வன் ஹனுமார், அரசச்செல்வனின் அதிசயக்குணங்களைக்கூற அதை கேட்ட அன்னை யடைந்த துக்கத்திற்கு அளவே இல்லை வானரத்தலைவன் ஸ்ரீரகுவீரனது விருத்தாந்தங்களை யெல்லாம் விவரித்துக்கூறியதைக் கண்ணும் கருத்துமாய் கருத்தூன்றிக்கேட்டனள் பிராட்டி.

135-136. "காதுகளுக்குக் கருணமிருதத்தைப் பெருக்கும் அமிருதமயமான ஆனந்த வார்த்தைகளைக் கூறும் பெரியார் ஏன் முன்னால் தோன்றக் கூடாது" எனத் தாய் கூறியதும் வாயுகுமாரன் அன்னையின் பக்கத்தில் செல்லச் செல்ல அன்னை ஸ்ரீ ஆஞ்சனேயரைக் கண்டு பயந்து திரும்பி உட்கார்ந்துகொண்டாள்.

137-139. சீதையின் செயலைக்கண்ட ஹனுமார் "என் தாயே! கருணைக்கடலாகிய காகுத்தன்மீது ஆணையிட்டுக்கூறுகிறேன். என்னைக்கண்டு பயம் வேண்டாம். ஸ்ரீரகுநாதனே என்னிடம் திருக்கணையாழியையளித்துத் தங்களைக்கண்டுவர திருவுள்ளங் கொண்டான்." எனப் பணிவுடன் தெரிவிக்க, ஜானகி, "மனிதனுக்கும் வானரங்களுக்கும் எவ்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

விதம் தொடர்பு ஏற்பட்டது" எனக் கேட்க, அஞ்சனையின் மதலை "சுக்ரீவராம ஸக்யம்" தோன்றிய வரலாற்றை விவரித்தார், அன்னைக்கு.

140. அன்பொழுகும் ஆறுதல் வரலாறு புகன்ற மாருதியிடம் "மனம், மொழி, செயல் ஆகியவற்றில் தூய்மையுள்ளவன் இவன்" என்ற எண்ணங் கொண்டாள் ஸீதை.

141–142. ஸ்ரீராமதாஸனின் சொல், செயல், தோற்றம் பணிவு ஆகியவற்றைக் கண்ட அன்னை கொண்டாள் ஆனந்தம். பெருகியது ஆனந்தக் கண்ணீர். உடல் பூரிப்பைப் பூண்டது. புல்லரிப்புத் தோன்றியது புளகாங்கிதம் அடைந்தாள். 'தந்தைக் கொப்பானவனே! துன்பக்கடலில் தத்தளிக்கும் எனக்குத் தாரகம்போன்ற. தெப்பக்கட்டையாக நீ கிடைத்தாய்" எனப்போற்றினள்.

143–144. "நான் பலியாவேன். கரதூஷணாதி களைக் கொன்ற ஸ்ரீ ரகுவீரனிடத்தில் என் நிலையைக் கூறு. ஹே ஹனுமானே! கிருபாநிதியாயும் இரக்கச் சித்தமுங்கொண்ட என் நாதனின் மனதில் ஏன் இந்த கடினத்தன்மை குடிகொண்டிருக்கிறது?

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

145–146. "அடியவர்களுக்கு அருளும் மிருது ஸ்வபாவமுள்ளவர் அல்லவா என் ப்ரபு! அவர் என்னை எப்பொழுதாவது நினைக்கிறாரா? எப்பொழுது கார்முகில் வண்ணங்கொண்ட அழகிய திருமேனியை என் கண்கள் கண்டு ஆனந்தமடையப் போகின்றன?" எனப் பலவாறு ஸீதா கூறினாள்.

147–148. கண்களில் நீர்பொழிய அன்னை இறுதியில் "ஹே நாதா! ஒரேயடியாகத் தாங்கள் மறந்துவிட்டீர்களே!" என மிக வருத்தத்துடன் கூறியதை கேட்ட ஸ்ரீராமதூதன் அன்னையின் மனவருத்தத்தையறிந்து பயபக்தியுடன் இனிமை பொருந்திய ஆறுதல் மொழிகளைப் புகன்றான்.

149–150. "ஹே மாதுசிரோமணியே! இளைய பெருமாளுடன் கூடிய இராமச்சந்திரர் மிக சுகமாய் வாழ்கிறார். கவலைவேண்டாம். ஆனால் சுந்தர புருஷனாகிய ப்ரபு தங்கள் வியோகத்தால் துன்புற்றிருக்கிறார். பெருமானைத் தாங்கள் தாழ்வாக நினைத்தல் கூடாது. ப்ரபுவுக்குத் தங்களிடத்தில் இருமடங்கு அன்புள்ளது.

151. "பிராட்டியே! ஸ்ரீராமமூர்த்தியின் திவ்ய அருளுரைகளைத் தைரியத்துடன் கேளுங்கள்"

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

என்று தழதழத்த குரலுடனும், கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகவும் கூற ஆரம்பித்தார்.

152–153. "ராகவன் தங்களிடத்தில் இவ்விதம் தெரிவிக்க என்னைப்பணித்தார். அதாவது "ஹே ஸீதையே! உன் பிரிவினால் என் செயலனைத்தும் தடுமாறிவிட்டன. அதிகம் கூறுவானேன்? புத்துயிர் பெற்றுத் தளிர்விடும் இலைகள் எனக்கு அக்னி போலவும், இரவு துன்பந்தரும் காலராத்ரி போன்றும், தண்ணிலவு பொழியும் தாரகேசன் தபிக்கும் பகலவனாகவும் மாறிவிட்டான்!.

154–155. "தாமரைக்குளம் பாலைவனமாகவும், மேகங்கள் கொதிக்கும் எண்ணெயைப் பொழிவன போன்றும், காணப்படுகின்றன. எம்மரத்தடியில் இருந்தாலும் துன்பமே உண்டாகிறது. தண்மையும், மென்மையும் இனிமையும் பொருந்திய தென்றல் நஞ்சுநிறை நாகத்தின் நச்சுக்காற்று போன்று துன்பந்தருகிறது.

156–157. "அன்புமிக்கவளே! துக்கத்தைப் பிறரிடம் கூறினாலாவது கொஞ்சம் குறையும். ஆனால் யாரிடம் கூறுவது? இத்துன்பத்தை என் மனதைத்தவிற வேறு யாரும் அறிந்தவரில்லை.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

ஹே பிரியே நம்மிருவரின் அன்பை என் ஹ்ருதயம் ஒன்றேஅறியக்கூடியது"

158–159. "அம்மனமோ எப்பொழுதும் உன் பக்கத்திலேயே நிலைத்திருக்கிறது. யாது செய்வேன்" என ஸ்ரீ ராமச்சந்திரனின் அன்பு பெருகும் ஆறுதல் மொழிகளை ஹனுமார் கூறக்கேட்ட தாயாரும் அன்புக்கடலில் மூழ்கித்தன்னையே மறந்து அமர்ந்திருந்தனள்.

160–161. ஹனுமார் மேலும், "ஹே, ஜகன் மாதாவே! அடியவர்களுக்கு அனவரதம் பேரின்பம் அருளும் ஸ்ரீ ராகவனை எப்பொழுதும் இடைவிடாது நினைத்துக்கொண்டு தைரியத்துடன் இருங்கள். ப்ரபுவின் பெருமைகளை மனதாரச்சிந்தித்து என் வசனங்களைக்கேட்டுத் துன்பத்தை அகற்றிக் கொள்ளுங்கள்."

162. "அரக்கரது கூட்டம் விட்டில் பூச்சிக் கொப்பானவை. ஸ்ரீ ராகவனின் பாணம் அவற்றை அழிக்கும் அக்னிக்கு நிகரானது. எனவே தைரியத்துடன் இருங்கள். அரக்கர்களைச் சுட்டெரித்து விடுவோம்.

163–164. "தாயே! ஸ்ரீராகவன் தங்களது இவ் விருத்தாந்தங்களைக்கேட்டு இனி தாமதம் செய்ய

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

மாட்டார்கள். ராக்ஷஸகூட்டமாகிய இருட்டுக்குத் தேஜோமயமான இராமனின் பாணம் அழிவைத் தரப்போகிறது !

165-166. "லோக மாதாவே! இப்பொழுதே தங்களை ஸ்ரீராகவனிடம் நான் தூக்கிக்கொண்டு ஸமர்ப்பித்துவிடுவேன். ஆனால் ப்ரபுவின் கட்டளை அவ்வாறில்லை ஆகையால் தைரியத்துடன் சில நாட்கள் எதிர்பார்த்திருங்கள், பிரான் வானரக் கூட்டங்களுடன் தங்களை அழைத்துப்போக இங்கு வருவார். இது உறுதி. இதனை ஸ்ரீராமச்சந்திரனின் ஆணையாகக் கூறுகிறேன்.

167-168. நாரதர் முதலிய முனிவர் மூவுலகங்களிலும் நாதனது புகழிசை முழக்க அரக்கர்களை அடித்துத் தங்களை வெற்றியுடன் அயோத்திக்கு அழைத்தேகுவான். இது உறுதி" என்றதும், அன்னை, "குழந்தாய்! எல்லாவானரங்களும் உன்னைப் போன்று சிறு உருவத்துடன் அல்லவா இருக்கும். அவை இங்கு வந்து பலசாலியான அரக்கருடன் சமர் புரிவது எங்ஙனம்?" என வினவினாள்.

169-171. மேலும் அன்னை, "ஹனுமானே! இதுவே என் மனத்தில் ஒரு பெரிய சந்தேகமாகக் குடிகொண்

T. 14.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

டிருக்கிறது. ஆகவே நீ கூறுவதெல்லாம் நிகழ்வது எப்படி?" எனக் கேட்டவுடன் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிகள் தன் வாஸ்தவமான பேருடலை வெளிப் படுத்த விஸ்வரூபங்கொண்டார். மேரு பர்வதத்திற் கொப்பான அதிபயங்கரமான மஹா பலம் பொருந் திய ஸ்ரீ ஹனுமாரின் பேருடலைக் கண்ணுற்ற பிராட்டியின் உள்ளத்தில் நம்பிக்கை தோன்றிய தும், ஹனுமார் தன் பழைய சிறு வடிவங் கொண்டார்.

172. மேலும் மாருதி இயம்பலுற்ருர், " தாயே கேளுங்கள். வானரங்கள் பலசாலிகளும் அல்ல. புத்திசாலிகளும் அல்ல. ஆனல் பிரபுவின் மஹிமை யினலும், அநுக்ரஹத்தாலும் சிறு நாகம் கூட கருடப் பறவையைச் சாப்பிடக்கூடும் ".

173-174. பக்தி, மஹிமை, பராக்ரமம், வீரம் முதலியவை நிறைந்த ஹனுமாரின் இனிய ஆறுதல் மொழிகளைக் கேட்டு, அன்னையும் மனதில் திருப்தியும் ஆனந்தமும் கொண்டாள். ' ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு மிகவும் பிரியமானவர் இவர் என நினைத்து ஹனுமானை அன்புடன் நோக்கிக், " குழந்தாய்! நீ பலம், புத்தி, இவைகளுக்கும் பொக்கிஷமாக விளங்குவாய் ".

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

175-176. " என் அன்புச் செல்வனே! பிறப் பிறப்பு அற்றவனாய் சிரஞ்சீவியாகத் திகழ்வாய். ஆத்மகுணங்களனைத்திற்கும் ஆச்ரயமாயிருப்பாய். ப்ரபு, தீனதயாளு ஸ்ரீ ராகவரின் கிருபைக்கு எப் பொழுதும் பாத்திரமாவாய்" என அன்புடன் ஆசீர்வாதமளிப்பதைக் கேட்ட ஆஞ்ஜநேயர், ப்ரேம பக்திக் கடலில் மூழ்கித் தன்னையே மறந்தனர்.

177-178. பிறகு ஸ்ரீ ராமதூதன் பலதடவை அன்னையின் திருவடிகளைத் தொழுது, கைகுவித்து 'என் தாயே! இப்பொழுதுதான் நான் பரமபாக்கிய சாலியானேன். என் கடமையையும் நிறைவேற்றி னேன். காரணம், தங்களது ஆசிமொழிகள் பலனுடையவைகளாகிவிட்டன. இதனை யாவரும் அறிவர்".

179-181. " தாயே! அழகிய பழங்களுடைய மரங்களைக் கண்டு எனக்கு மிகவும் பசி அதிகமா கிறது" என ஸ்ரீ ஹனுமார் கூறிக், குழந்தாய்! மாபெரும் வலியுடைய அரக்கர் இந்நந்தவனத்தை காத்துவருகின்றனர்". என்று ஸீதை பதிலளிக்க அதற்கு ஹனுமார், " எனக்கு அவர்களைப் பற்றிப் பயமில்லைச் சிறிதும். இக்கனிகளை நான் அருந்து

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

வதில் உங்களுக்கு இன்பமுண்டாயின் உத்தரவு அளியுங்கள்" எனப் புகன்றான்.

182. அன்னையும் தூதுவனின் புத்தி, பலம், ஸாமர்த்தியம் முதலியன கண்டு அகம் மகிழ்வுற்று "ஸ்ரீ ராமமூர்த்தியின் திவ்ய சரணாரவிந்தங்களை துதித்துக்கொண்டு நீ விரும்பியபடி இவ்வனத்தில் உள்ள இனிய கனிகளை உண்ணும்" என உத்தரவு அளித்தனள்.

183-184. உடனே மாருதி மாதாவைத் தொழுது அசோகவனத்தினுட் புகுந்து வயிறார இன்கனிகளை உண்டு மகிழ்ந்து, காவல் புரியும் ராக்ஷஸர்களில் பலரைக் கொன்றும், மரங்களை அடியோடு அழித்தும் அட்டகாசம் செய்தார். உயிர் தப்பிய காவலாளிகள் இராவணனின் அவைக்களத்தை அண்மி, வானரத்தின் அட்டகாசச் செயல்களை விரித்துக் கூறினர்.

185-186. "ஹே தலைவனே! ஒரு பெரிய வானரம் நம் அசோக வனத்தில் தைரியமாய் நுழைந்து அருமைக் கனிகளை இனிதுண்டு ஆங்காங்கு மரங்களை வீழ்த்தியும், அரக்கர்களை அழித்தும் அட்டகாசம் செய்துகொண்டிருக்கிறது" என்று கதறினர்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

187-188. இச்செய்தியைச் செவிமடுத்தும் கோபங்கொண்ட அரக்கர்கோன், அநேகம் அரக்கர்களை அனுப்பினான். அவர்களைக் கண்டதுமே ஹனுமாரும் புரிந்தார்வீரகர்ஜனை. அவ்வளவுதான். முடிந்தனர் அவுணர்கள். எஞ்சியோடிய வீரர்கள் அடைந்தனர் இராவணனது அவைக்களம். நடந்த விஷயத்தைத் தெரிவித்தனர்.

189-190. உடனே ராவணன் தன் இளைய மைந்தன் அக்ஷயகுமாரனைப் போரிட ஏவினான். அவனும் அளவிடமுடியா அவுணர் சேனையுடன் ஆரவாரித்துக்கொண்டு வருவதைக் கண்ணுற்ற வீர ஹனுமார் கையினில் பெரிய விருக்ஷத்துடன் துள்ளிக் குதித்து அவனை அழித்து வீர கர்ஜனை புரிந்தனர்.

191. அப்போரில் சிலர் கொல்லப்பட்டனர். சிலரைக் கிழித்தெறிந்தார். சிலரைப் பிடித்து மண்ணோடு மண்ணாகத் தேய்த்துவிட்டார். உயிர் பிழைத்தோடிய அரக்கர்கள் இராவணனிடம் ஓடோடிச்சென்று அக்ஷயனின் முடிவைத் தெரிவித்து ஹனுமாரின் வீரச்செயல்களையும், பராக்ரமத்தையும் விவரித்தனர்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

192-193. தன் மைந்தனின் முடிவைக் கேட்ட இலங்கை மன்னன் மிகக் கோபமுற்று மஹாபலம் பொருந்திய மேகநாதனை அழைத்து "மைந்தனே! நீ போருக்கு செல். வானரத்தை உயிருடன் பிடித்து வா. அதன் வரலாற்றை நான் அறிய விரும்புகிறேன்" என முழங்கி அமரிட அனுப்பினான்.

194-195. இணையற்ற மஹாவீரனான இந்திரஜித் தன் தம்பியின் முடிவை அறிந்து அளவிடற்கரிய சினத்துடன் சீறியெழுந்து போர்க்களத்தை அடைந்தான். மாபெரும் அவுணர் வீரன் வருவதை கண்ட கம்பீர மாருதி, பல்லை நறநறவெனக் கடித்து ஸிம்ஹ கர்ஜனையுடன் எதிர்த்தோடி வந்தார், அவன் எதிரே.

196-197, அருகிலுள்ள பெரிய மரத்தை வேருடன் பிடுங்கி அறைந்தார், இந்திரஜித்தின் தேரின்மேல். தேர் சின்னாபின்னமாகிவிட்டது, அத்துடன் பற்பல வீரர்களையும் பிடித்துப் பிடித்துத் தன்னுடலோடு இறுகத்தேய்த்து இறுதியையும் அளித்தார் அவர்களுக்கு.

198-200. இவ்வாறு தீரமாருதி பயங்கரமாகப் போரிட்டுப் பல அரக்கர் சைன்யத்தை ஹதஞ்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

செய்துகொண்டே மேகநாதனை அடைந்து போரிட்டார். இரு பெரிய யானைகள் போரிடுவனபோன்று அதிபயங்கரமாக அமர் நிகழ்ந்தது. மாருதி இந்திரஜித்தின் மார்பில் திடீரென ஓர் குத்துக் குத்திக் கீழே தள்ளிவிட்டு அமர்ந்தார், ஒரு பெரிய மரத்தில் சற்று அமைதியுடன். மூர்ச்சையுடன் விழுந்த மேகநாதன் ஒரே கணத்தில் விழித்தெழுந்து பற்பல மாயா விநோதச் செயல்களால் ஹனுமாரை அழிக்க முயன்றும், பயன்பெறவில்லை.

201. இறுதியில் இந்திரஜித் ப்ரும்மாஸ்திரத்தை தன்மீது ப்ரயோகம் செய்வதைக் கண்ட பவன குமாரர், "ப்ரும்மாஸ்திரத்தையும் நாம் அழித்தால் ப்ரும்மாவின் மஹிமையும் அழிந்துவிடும். எனவே அதனைப் பெருமைப்படுத்தவேண்டும்" எனத் தன் மனத்தில் தீர்மானித்தார்.

202-203. அத்தருணத்திலேயே இந்திரஜித்தினால் ஏவப்பட்ட ப்ரும்மாஸ்திரம் வானரத் தலைவனை தாக்க அவரும் மூர்ச்சையுடன் தரையில் சாயும் பொழுதும் பற்பல அரக்கர்களை அழித்துக் கொண்டே சாய்ந்தார். மேகநாதனும் ஹனுமார் மூர்ச்சித்து வீழ்ந்தான் என்பதை அறிந்தவுடன்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

நாகபாசத்தால் வானரத்தைப் பிணித்துத் தந்தையின் அவைகளத்திற்கு அழைத்துச்சென்ருன்.

204-205. சிவபெருமான் உமாதேவியைப் பார்த்து, "ஹே பார்வதி! எந்தப் பிரபுவின் நாமங்களை ஜபித்த ஞானிகள் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலையடைகின்றனரோ அப்படிப்பட்ட ப்ரபுவின் தூதனுகிய ஸ்ரீ ஹனுமாரா, இவ்வாறு பாணங்களினுல் கட்டப்பட்டார்? "என ஐயம் கொள்ளாதே. தலைவனுகிய ஸ்ரீ ராமனின் கைங்கர்யத்திற்காகவே தானே மேகநாதனின் கட்டுகளில் கட்டுப்பட்டார்" என அறிவாய் என்று சந்தேகத்தை தெரிவித்தார்.

206, 207. மாருதி இவ்விதம் இந்திரஜித்தால் கட்டுண்டு இராச சபைக்கு இழுத்துச் செல்லப் படுவதைக் கேட்ட ராக்ஷஸர்கள் கூட்டங் கூட்டமாக அரசசபையை அடைந்து, வேடிக்கை பார்க்கக் குழுமினர். வீரனும் ராவணனது அழகிய அவையைக் கண்டு அகம் மகிழ்ந்து " இதன் பெருமையை யாவராலும் கூற இயலாது" என வியந்திருந்தார்.

208-209. தேவதைகளும், திக்பாலகர்களும் கைகட்டி வாய் புதைத்து வணங்கிப் பயத்துடன் இராவணனது கண்ஜாடைகளின் கட்டளைகளை

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

எதிர் நோக்கி யிருப்பதைக் கண்ணுற்ற கம்பீர மாருதியின் மனதில் மட்டும் அச்சம் புகவில்லை. நச்சரவங்களின் நடுவில் கம்பீரமாக நிற்கும் கருடனைப் போன்று நிர்பயமாக நின்று காட்சி யளித்தார் ஸ்ரீ ரகுநாயகரின் தூதர்.

210. இந்நிலையில் ஹனுமானை நோக்கிய அரக்கர் கோன் முதலில் பலவாறு கழித்துரைத்து ஏளனம் செய்தான். ஆனால் தன் மைந்தன் அக்ஷயனின் முடிவை எண்ணி மிகவும் மனவருத்தமும் திகலும் கொண்டான் மனதில்.

211-212. பிறகு தூதனைநோக்கி "ஹே குரங்கே! நீ யார்? யாருடைய துணையினால் அசோகவனத்தை அழித்தாய்? என்னைப்பற்றி இதுவரை கேட்ட தில்லையா? ஹே மூட! உனக்குச் சிறிதுகூட பய மென்பதில்லையா?"

213-214. "அட அறிவற்றவனே! உன் உயிரை நினைத்தும் கூட அச்சமில்லையா? கூறடா? எக் குற்றங்கண்டு அவுணர்களை அழித்தாயடா?" என்று அதட்டினான், அரக்கர் மன்னன். அதற்கு "அட இராவணா! கேளடா. எந்தப் பிரபுவின் துணையினால்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

மாயை அநேகம் ப்ரும்மாண்டங்களைச் சிருஷ்டித்திருக்கிறதோ''

215-216. "அட பத்துத் தலையனே! எத்தலைவருடைய அனுக்ரஹ பலத்தினால் அரி, அயன், அரன் உலகில் தோன்றி காத்தல், படைத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை நிகழ்த்துகின்றனரோ; மேலும் எவருடைய பலத்தினால் ஆதிசேஷன் தன் தலையில் மலைகள், காடுகள் நிறையுலகைத் தரித்திருக்கின்றானே;

217-219. இன்னும் தேவதைகளைக் காக்கப் பற்பல அவதாரங்களை எவர் தாங்கினாரோ; உன்னைப் போன்ற துஷ்டர்களைச் சிக்ஷை செய்கின்றாரோ; கடினமான அரன் வில்லை எவர் வளைத்தொடித்தாரோ; உன்னுடன் குழுமிய மன்னர்களின் மானத்தையும் வீரத்தையும் எவர் முன் அழித்தாரோ பலசாலியான கரன், தூஷணன், திரிசிரன், வாலி போன்றவர்களை எவர் நாசம்செய்தாரோ.

220. ஹே ராவணா! எந்தச்சிவபெருமானுடைய அனுக்ரஹத்தால் கிடைத்த பராக்ரமத்தால் அண்ட பிண்ட சராசரங்களை நீ அடக்கியாண்டு வருகிறாயோ அந்தச் சிவபெருமான் எவருடைய சிறு அனுக்ரஹ

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

யலத்திஞல் பலமுள்ளவராகத் திகழ்கிருரோ எவருடைய அன்பார்ந்த மனைவியை நீ திருடி வந்திருக்கின்றனையோ அப்படிப்பட்ட பெருமானின் தூதன் நான் என்று உணர்க"

221–222. "நான் உனது செல்வத்தின் சிறப்பை யறிவேன். கார்த்தவீர்யார்ஜுனனுடன் அமர் செய்து அடைந்த கீர்த்தியையும் வாலியுடன் வாதிட்டுப்பெற்ற உன் பெருமையினையும் நான் நன்கறிவேன்" என்ற ஹனுமாரது இகழ்ச்சியுரைகளைக் கேட்டு வெட்கமடைந்தன்: அதனை அரக்கர் கோன் புன்சிரிப்பிஞல் மறைத்துக்கொண்டான்.

223–224. மேலும் மாருதி புகன்ருர். "அட ராவணு! என் பசியைத்தீர்க்கக் கனிகளையுண்டேன். வானரங்களோ ஸஞ்சல ஸ்வபாவமுள்ளவை. அதன்படி உன் வனத்திலுள்ள மரங்கள் என்ஞல் வேருடன் பிடுங்கியெறியப்பட்டன. ஹே ராக்ஷஸத் தலைவனே! தன்னுயிர் எவருக்கும் இன்னுயிர் எனவே என்னைக் காக்கத் தீயவழிகளில் தலையிட்ட தானவர்களைத் தாக்கியழித்தேன்."

225–226. "என்னை அழிக்கவந்தவர்களை ஹதம் செய்தேன். இதனிடையில் உன் செல்வன் என்னைப்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

பிணித்தான். ஆனுல் அதனுல் எனக்குச் சிறிதும் அவமதிப்பில்லை. என் நாதனின் கடமைக்காகவே நான் இவ்விதம் கட்டுண்டேன்.

227-228 "இராவணு! நான் கைகுவித்து விநயத்துடன் தெரிவிக்கிறேன். உன் கர்வத்தைத் தவிர்த்து என் உபதேசங்களைக் கேள். மனதில் நன்கு ஆலோசனை புரிந்துணர்ந்துகொள். சந்தேகத்தை விட்டு எம்பெருமானின் திருவடிகளைப் பஜி"

229-230. தேவதைகள், தானவர்கள், சராசரங்கள் அனைத்தையும் அழிக்கும் மகா காலஸ்வரூபியான யமனும் எம்பிரானுடைய கோபத்திற்குப் பயப்படுகிருனே அப்பிரானுடன் ஒரு பொழுதும் விரோதம் கொள்ளாதே. என் வார்த்தைகளைக் கேட்டு அப்பெருமானிடம் ஜகன்மாதாவாகிய ஜானகிப் பிராட்டியை ஸமர்ப்பணம் செய்து சிறப்புடன் வாழ்வாய்.

231. "ஸ்ரீ ரகுகுலதிலகன், சரணுகதியடைந்தோரைப் புரக்கும்புரவலன், கருணைக்கடல். கரனைக் காலனிடம் அனுப்பிய ப்ரபு ஸ்ரீ ராமச்சந்திரனின் திவ்ய சரணுரவிந்தங்களில் அடைக்கலமடையின் நீ செய்த பெரும் பிழைகளைப் பொறுத்து ரக்ஷிப்பார்."

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

232-233. "ஸ்ரீ ரகுநாதனின் திருவடிகளில் பக்தி செய்துகொண்டு இலங்கை யாட்சியை நீடு நடாத்திவருவாயாக. புலஸ்த்ய முனிவரின் பெருமை நிலவுபோன்று களங்கமற்றது. அவர் குலத்தில் தோன்றிய நீ அதற்கு மாசு உண்டாக்காதே."

234-235. "நீ தற்பெருமை, மோஹம் ஆகிய வற்றை உதறித்தள்ளி நன்கு சிந்தித்துப்பார். ஸ்ரீ ராம நாமத்தைத் தவிர பிறவார்த்தைகளுக்கு அழகு எங்ஙனம் தோன்றப் போகின்றது. அழகிய பெண் விலை மதிக்கமுடியாத ஆபரணங்களை அணிந்திருந் தாலும் ஆடை இல்லையாயின் அவளழகு எங்ஙனம் குறைபடுகின்றது என்பதை யெண்ணுக."

236-237. "உற்பத்திஸ்தானத்தில் போதுமான பெருகும் ஜலமில்லாமல் நடுவே ஏராளமான தண் ணீருடையதாகக் காணப்பட்ட நதியானது எவ் வாறு சிறு காலத்தில் வரண்டு விடுமோ அது போன்றதோ ஸ்ரீ ரகுவீரனிடத்தில் பக்தியில்லாத வனுடைய ஐஸ்வரியங்களும், அரசாட்சியும்."

238-239. "பத்துத்தலை அரக்கனே! கேள். நான் ஆணையாகக் கூறுகிறேன். ஸ்ரீ ராகவனுடைய விரோதியை யாவராலும் பாதுகாக்க முடியாது.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

எம்பிரானுடைய பகைவனுகிய உன்னை ஆயிர மாயிரம் அரனோ, அயனோ, அரியோ அடைக்கலங் கொடுத்துக் காக்க முடியாதென்பது உறுதி."

240. "நீ மோஹத்திற்குக் காரணமாயும், துன்பம் கொடுக்கிறதாயுமுள்ள தமோகுண ஸ்வரூபமாகிய தற்பெருமையை அகற்றிப் பிரபுவாகிய ஸ்ரீ ராமசந்திரனை அனவரதமும் பஜிப்பாயாக."

241-242. இவ்விதம் ஹனுமார் பக்தி, ஞானம், நீதி பொருந்தியதாயும், ஹிதமானதாயுமான நல்லுரைகளை நயம்பட நவின்றபோதும் கயவனும், தற்பெருமையுள்ளவனுமிருக்கும் இராவணன் அவற்றைக் கேட்டு நகைத்து, "இக்குரங்கு எமக்கு அரிய பெரிய உண்மைகளை உபதேசிக்கும் குருவாகக் கிடைத்துள்ளது,"

243-244 "அட துஷ்ட வானரமே! நீ என்னால் தண்டிக்கப்படப்போகிறாய். உனக்குக் காலன் சமீபித்துவிட்டான்" என்றதும், ஹனுமார், "அட, அரக்கனே! இதற்கெதிராகவே நடக்கப் போகிறது. ஏனெனில் நீ அறிவிழந்துவிட்டாய். இதனை நான் நன்கு உணர்வேன்" என்று பதில் உரைத்தார்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

245-246. ஹனுமானுடைய இக்கொடிய வசனங்களால் இராவணன் அதிகக் கோபமுற்று "நீங்கள் ஏன் இந்தக் கயமைக் குரங்கைக் கொல்லவில்லை இன்னும்?" என்று ஆரவாரிக்க, அண்மையிலுள்ள அவுணர்கள் ஆத்திரத்துடன் நெருங்கும் சமயம் விபீஷணன் மந்திரிகளுடன் ஆங்கு வந்தெய்தினன்.

247-249. விபீஷணன் இராவணனுடைய அடிகளை வணங்கி, "வினயத்துடன் அண்ணா! தூதுவனைக் கொல்லக்கூடாது. தங்களது கட்டளை அரசநீதிக்குப் புறம்பானது. இதற்கு வேறு ஏதாவது தண்டனையிடுங்கள்" எனத் தடுக்கவும், எல்லா அரக்கர்களும் அதனை ஆமோதிக்க, "இக்குரங்கை அங்கஹீனமடையச் செய்து விரட்டிவிடுங்கள்."

250, மேலும், "வானரங்களுக்குத் தங்கள் வாலில்தான் அதிகம் பிரியம். எனவே எண்ணெயில் தோய்த்த துணிகளினால் வாலைச் சுற்றிக் கட்டி நெருப்பிடுங்கள்" என்று நகையுடன் கூறினன்.

251-252. "வாலிழந்த வானரத்தைப் பார்த்து அதன் தலைவனுமிங்கு வருவான். அப்பொழுது அத்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

தலைவனது பெருமையையும் நாம் பார்த்துவிடலாம்" என்றான், அவுணர்களை நோக்கி.

253-254. இதனைக் கேட்ட ஹனுமாரும் மனத்திற்குள்ளே நகைத்து, "அன்னை கலைவாணி நமக்கு துணைசெய்தனளே" என்று மகிழவே, அரக்கர் கோனிட்ட அக்கட்டளையை நிறைவேற்ற அரக்கர் குழாம் கூடியது.

255-256. இங்கு ஹனுமார் செய்த லீலை என்ன வென்னில், இலங்கை நகரிலுள்ள துணிகள் மலைகள் போல் குவிந்தும்கூட வால் முழுவதும் சுற்றிக் கட்டமுடியவில்லை. நெய், எண்ணெய் வகைகள் குடம் குடமாகக்கொண்டு வாலில் நனைத்தும் எண்ணெய்ப் பசை சிறிதுகூடக் காணப்படவில்லை. அவ்வளவு பெருகியது அதன் வால். இவ்வதிசயத்தைக் காணத் திரண்டனர். திரளாக நகரப் பெருமக்கள் சிலர் ஹனுமானை இழிவாகப்பேசி விலகினர். சிலர் வேடிக்கை செய்தனர்.

257-258-259. பின்பு பேரி, டோலக் முதலிய வாத்தியங்களை முழக்கியும் கைகளைக் கொட்டியும் ஆரவாரித்துக் கொண்டு இலங்கை முழுமையும் ஹனுமானைச் சுற்றி இழுத்து வந்தபின் வாலுக்கு

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

நெருப்பிட்டனர். நெருப்புப் பற்றி எரிவதைக் கண்டதும் தன்னுடலைச் சிறியதாக்கித் தன்னை விடுவித்துக்கொண்டு, ஸுவர்ண மாளிகை ஒன்றின் ஸ்தூபியில் தாவிச் சென்றமர்ந்ததைக் கண்ட அரக்கியர்கள் அதிக பயமடைந்தனர்.

260. அத்தருணத்தில் பகவானுல் கட்டளையிடப்பட்ட காற்றும் பலமாக வீசியது. ஹனுமாரும் அட்டகாசத்துடன் ஸிம்ஹ கர்ஜனை புரிந்தார். ஆகாயவீதியில் தாவிக் குதித்தார்.

261-262. ஹனுமானின் உடல் மிகவும் பெருகியது. ஆனுல் லேசாகவே இருந்தது. இதனுல் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சுலபமாகவே சென்றார். இலங்கைத் தீயினுலிவ்விதம் அழிவதைக்கண்ட நகர மாந்தர் நடு நடுங்கினர். நெருப்பும் அதிகவேகமாக எங்கும் கொழுந்து விட்டெரிந்தது.

263-264. எங்கும் கூக்குரல் ஐயோ! அம்மா! அப்பா! என்ற அலறல் 'இப்பொழுது எம்மைக் காப்பவர் யார்' என்று கதறினர் பலர். "நான் கூறினேன். இது குரங்கல்ல. குரங்கு வடிவத்தில்

T. 15.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

வந்த ஒரு தேவதை" என்ற விம்மலுடன் கூடிய வீணுரைகளை வாதாடினர் பலர்.

265-266. "நல்லோரது உபதேசங்களைக் கேட்காததால் வந்த பலனிது. பாருங்கள். காப்பாரற்று, கொழுந்து விட்டெரிகின்றது. நம்மிலங்கை நகர். இங்கு நெருப்புப் பற்ருத இடம் அணு அளவுகூடக் கிடையாது. ஆனல் விபீஷணனது அரண்மனை மட்டும் எரியவில்லை என்ன ஆச்சரியம்" அங்கலாய்த்தனர் அநேகர்.

267-268. "ஹே பார்வதி! கேள். அக்னி ஸ்ரீராமனின் படைப்பு அல்லவா? இதுவே காரணம்" எனச்சிவபெருமான் விளக்கினர். விபீஷணனது காவலை பிறகு வானரவீரன் இலங்கையைத்தீயினுல் சின்ன பின்னப்படுத்திக் கடல் குதித்தார்.

269. வாலிலுள்ள நெருப்பையணைத்துக் களைப்பு நீங்கிச் சிறுவடிவத்துடன் கூப்பிய கைகளுடன் ஜானகி தேவியின் முன்னர் பணிவுடன் இவ்விதம் தெரிவித்துக்கொண்டார்.

270-271. "தாயே! நாதன் எவ்வாறு தங்களுக்கு அங்குளீயகம் தந்து அனுக்ரஹம்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

செய்தாரோ அவ்விதமே அடையாளமாக ஐயனுக்கும் ஸமர்ப்பணம் செய்ய அநுக்ரஹியுங்கள் எனவே ஸீதாதேவியும் தன் சிரோரத்னமாகிய சூடாமணியைக்கொடுத்து அருள ஹனுமார் மிகவும் பயபக்தியுடனும் ஸந்தோஷத்துடனும்பெற்றுக்கொண்டார்.

272-273. தூதனே! என் சாஷ்டாங்க வந்தனங்களை ஸமர்ப்பித்து என் நாயகனிடம் "தாங்கள் எவ்வகையிலும் பரிபூர்ணமானவர். அடியவருக்கு அருள் பாலிப்பவர். ஏழைப் பங்காளன், எனவே தங்களது சபதத்தை ஞாபகத்தில் வைத்து எனது துக்கத்தை அகற்றிடுவீர்".

274-275. "ஹே ஹனுமானே! நாங்களிருவருமே யறிந்த ஐயந்தனது வரலாற்றையும் அடையாளமாகக் கூறுங்கள். அப்பொழுது பயன்பட்ட ராமபாணத்தின் அருமை பெருமைகளையும் ஞாபகப்படுத்துங்கள். இன்னும் ஒரு மாதத்தில் பிரபு இங்கு வராவிடில் இராவணன் என்னைக் கொன்று விடுவான்".

276-277. "மாபெரும் வீரனே! எவ்விதம் இனி உயிர் தாங்குவேன்! நீயும் புறப்படத்தயாராகி விட்டாய். உன்னைப் பார்த்தாவது எனக்கு மிகவும்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

ஆறுதலும் மகிழ்வும் ஏற்படுகிறது. நீ சென்றதும் எனக்கு இரவும் பகலும் முன்போலவே துன்பத்தை தரப்போகின்றன'' எனப் பலவாறு கூறினுள், பிராட்டி.

278. அப்பொழுது மகாவீர மாருதி தாய்க்குப் பலவாறு தைரியம்பொருந்திய ஆறுதல் மொழிகளைக் கூறித் தேற்றித் திருவடிகளைத் தொழுது வணங்கி ஸ்ரீராமனை அடைய விரும்பினுர்.

279-280. வானர வீரன் வீர கர்ஜனை புரிந்து கொண்டே இலங்கை நகரைக் கடந்து கடற் கரையையடைந்தான். அவரது கர்ஜனையைக் கேட்ட அரக்கியரது கர்ப்பங்கள் நிலைகுலைந்தன. அங்கிருந்து ஒரே தாண்டுதலினுல் கடலைக்கடந்து இக்கரையையடைந்து வீரமுழக்கம் புரிந்து தன் வரவை வானரச் சைன்யங்களுக்கு விளம்பரம் செய்தான்.

281-282. வானரங்கள் ஹனுமானின் வரவையும் தெளிவான முகப்பொலிவையும் கண்டு புதுப் பிறவி பெற்றனபோல்மகிழ்ந்தன. வாயுபுத்திரனின் களையான முகத்தோற்றம், எழில் மிளிரும் தேக காந்தி முதலியன கண்ட கபிகள் ஸ்ரீராமரின் காரியம் வெற்றி பெற்றதையறிந்துகொண்டன, ஆனந்தம்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

283-284. வறண்ட நீர்நிலையில் உயிருக்குப் போராடும் மீன்கள் வெள்ளம் பெருகினால் எய்தும் ஆனந்தம்போல் வானரங்கள் மட்டில்லா மன மகிழ்ச்சியுடன் பற்பல புதிய விஷயங்களைக் கேட்டும் கூறியும் ஸ்ரீ ராமனின் ஸந்நிதானம் அடைந்தன.

285-286. இடையிலே சுக்ரீவ வேந்தனது ஒய்யாரத் தோட்டமாகிய மதுவனம் குறுக்கிட்டது. அங்கதனைத் தலைவனாகக் கொண்ட வானரப் படைகள் உள்ளே நுழைந்தன. ஏறின பலமரங்களில். மனம் விரும்பிய கனிகளையுண்டு ஊசலாடின, பாடின. தடுக்கவந்த காவலாளி பெற்றான் பல மான உதைகளையும் அறைகளையும்.

287. அத்துடனேயே ஓடோடிச் சென்று அங்கதனுடன் வானர சைன்யங்கள் செய்த அட்ட ஹாஸத்தைத் தெரிவித்தான், காவலாளி. இதைக் கேட்ட சுக்ரீவன் ஸ்ரீ ராமனின் கைங்கர்யம் நிறை வேறியதையூகித்துணர்ந்தான். ஆனந்தம் கொண் டான், மனதில்.

288-289. "ஸீதையைக்கண்டதினாலேயே வான ரங்கள் மதுவனத்தை ஆனந்தத்தினால் நிலைகுலையச் செய்தன. இல்லாவிடில் உள்ளே எவரும் நுழைய

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

மாட்டார்களே" என்று சிந்திக்கையிலே, வானரப் படைகளுடன் அங்கு ஹனுமார் தோன்றினர் அதிக கம்பீரத்துடன்.

290-291. அனைவரும் அரசனை வணங்க சுக்ரீவ வேந்தனும் சந்தோஷத்துடன் வரவேற்றான். "சுகமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டதும், "தங்களது பாத தர்சனத்தாலேயே நாங்கள் ஸௌக்யம். பிரபு ஸ்ரீ ராகவனுடைய திருவருளினால் எல்லாக் காரியங்களும் இனிது நிறைவேறின" என கபி சைன்யங்கள் விடையளித்தன.

292-293. மேலும், "தலைவனே! ஹனுமானே எல்லாச் செயல்களையும் செய்து புகழ்பெற்றதோடு நம்மனைவரது ப்ராணனையும் காப்பாற்றினார்" என மனமகிழ்வுடன் தெரிவித்தபோது, சுக்கிரீவன் தாவிக்குதித்தெழுந்து ஹனுமானை வாரி அணைத்து, வானரங்களுடன் ஸ்ரீ ராமபிரானின் சந்நிதியைச் சமீபித்தான்.

294-295. வானரங்கள் குதூஹலத்துடன் குதித்து வருவதைக் கண்ட பிரபுவின் மனம், "வானரங்கள் வெற்றியுடனே வருகின்றனர்" என்பதையுணர்ந்து மலர்ந்தது. இளையபெருமா

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

ளுடன் தூய வெண்மை நிறங்கொண்ட பாறையில் ஐயன் அமரவும், வானரங்களனைவரும் திருவடிகளைத் தொழுது வணங்கினர்.

296. கருணைக் கடலான ஸ்ரீ ரகுநாதன் அன்புடன் அனைவரையும் நலன் விசாரித்தார். எல்லாரும் ஸ்ரீ ராகவனது திருவடிகளது தரிசனத்தால் சுகமாக விருப்பதைத் தெரிவித்தனர்.

297-298. அப்பொழுது ஜாம்பவான், "ஹே ப்ரபுவே, ரகுவீரா! கேளுங்கள். எவர் மீது தங்களது கடைக்கண் பார்வை விழுகிறதோ அவருக்கு எப்பொழுதும் மங்களமும், சௌக்யமும் உண்டாகிறது. தேவதைகள், மனிதர்கள், முனிவர்கள், முதலிய யாவரும் அவரிடத்தில் அன்பு காட்டுகின்றனர்."

299-300. "அவனே வெற்றி பெறுவோன், அடக்கமுள்ளவன், நீதிமான், குணம் நிறைந்தவன்; அவனுடைய பெருமையை மூவுலகங்களும் போற்றுகின்றன. எனவே தங்களது கிருபையினுல் காரியம் நிறைவேறியது. எங்கள் பிறவியும் இன்றே பயனடைந்தது."

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

301-302. "ஹனுமாரின் வீரச் செயல் ஆயிரம் நா படைத்தாலும் நவிலும் தரமன்று" என ஜாம்பவான் ஹனுமாரின் அழகிய வரலாற்றைப் பிரபுவுக்கு எடுத்தியம்பினுன்.

303-304. கிருபாநிதி இதனைக் கேட்டதும் விரைந்து ஹனுமாரை மார்புற ஆவலோடு ஆலிங்கனஞ் செய்து, அவனை மாபெரும் வீரன் என எண்ணி "குழந்தாய்! ஸீதாதேவி எங்ஙனம் வாழ்கிருள்? எவ்விதம் தன்னுயிர் தாங்கி வாழ்கிருள்? "கூறுக" எனக் கேட்டார்.

305. அதற்கு வீரன், 'எஜமானே! ஜானகி மாதா அல்லும் பகலும் ஸ்ரீ ராம நாமஜபம் செய்து கொண்டிருக்கிருள். தங்களது வடிவழகினையே மனதில் தியானிக்கிருள். தன் காலடிகளையே காண்கிருள். இந்நிலையில் பிராணன் எவ்வழியில் வெளிச் செல்லும்?"

306. "நான் திரும்பும்போது சூடாமணியைத் தந்தனள்" எனப் பணிவுடன் கூறி ஸமர்ப்பணம் செய்ய, பிரபு அதனை ஆவலுடன் வாங்கி மார்புற அணைந்து கொண்டார்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

307-308. பின், "ஹே நாத! கண்களில் நீர்பெருக அன்னை கூறினாள். இளையபெருமாளுடன் கூடிய ஸ்ரீ ராகவனின் திவ்ய திருவடிகளில் என் நமஸ்காரங்களுடன் இவ்வாறு தெரிவிப்பாய்" என்று ஹனுமான் அன்னை கூறியவற்றை எடுத்துக் கூற ஆரம்பித்தார்.

309-310. "ஹே ப்ராணநாத! மனமொழி மெய்களினால் தங்களைச் சேர்ந்த நான் செய்த தவறு யாது? ஏன் என்னைத் தியாகம் செய்து விட்டீர்கள்? தங்களைப் பிரிந்த என்னுயிர் இன்னும் நீங்கவில்லை. அதுவே ஒரு பெரும் தவறாக இருக்கலாம்."

311-314. ஆனால் அது என்னிரு கண்களின் குற்றம். அவைகள் தங்களைத் திரும்பக் கண்டானந்திக்கலாமென்ற பேரவாவினால் உயிர் துறக்க மறுக்கின்றன. மேலும் தங்களது பிரிவாகிய நெருப்பு மூச்சுக் காற்றினால் சரீரமாகிய பஞ்சை ஒரு கணத்தில் பொசுக்கிவிடலாம். ஆனால் கண்கள் கண்ணீரால் அந்நெருப்பைத் தணித்துக்கொண்டிருக்கின்றன. ஹே கிருபாநிதியே! ஸீதாதேவியின் மிக வருத்தமான நிலை கூறும்தரமன்று."

315. "ஒவ்வொரு கணமும் யுகம்போலக் கழிக்கின்றனள். எனவே, எம்பிரானே! விரைவாக

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

இலங்கையடைந்து தோள்வலியால் தானவர்களை அழித்து ஸீதாதேவியையழைத்து வருவீர்" என்றார் ராமதூதர்.

316-317. ஸீதையின் நிலையினையும், வசனங்களையும் ஸ்ரீ ராமன் வானர வீரர்களின் மூலம் கேட்டதும் தாமரைக் கண்களிலிருந்து கண்ணீர் ஆறுகப் பெருக, "மனம், மொழி, மெய்களினுல் என்னைச் சரணடைந்த பிராட்டியை ஒருபோதும் துன்பம் தொடரமுடியாது" என்று ஆறுதல் கூறினுர்.

318-319. பின் மேலும் கூற ஆரம்பித்தார் ஹனுமார். "ஹே பிரபுவே! தங்களது நாம ஸ்மரணம், நாமஸங்கீர்த்தனம் இல்லாச் சமயம் அல்லவா துக்கம் தரும் வேளை. தலைவனே! அரக்கர் அற்பர்கள். அவர்களை வென்றுவிரைவாக அன்னையைப் பெறுவீர்" என்று முடித்தார்.

320-321. "ஹே ஹனுமானே! கேள். உன்னைப் போன்று எனக்கு பேருதவி செய்தவர் தேவதைகளிலோ, மனிதர்களிலோ முனிவர்களிலோ கிடையாது. உனக்கு பிரத்யுபகாரம் யான் யாது செய்யலாமென்று என் மனதால்கூட நினைக்கமுடியவில்லையே."

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

322–323. ஹே பவனகுமார! நான் நன்கு ஆலோசித்தேன். உனக்கு நான் மிகவும் கிருதக்ஞுவேன்" என்று கண்களினுல் பல தடவை ஹனுமானைத் திருவருள் கூர்ந்து நோக்கினுர். ஹனுமானும் ஸ்ரீராகவனது கருணை பெருகும் கடைக்கண் பார்வை பெற்றுக் கண்களில் நீர் சொரிய புளகாங்கிதம் பூண்டார்.

324. பிரபுவின் திருவாய்மொழிகளைக் கேட்டுத் திருமுகமண்டலத்தின் அருட்பாலிக்கும் பொலிவையும் கண்ட வாயுபுத்திரர், மனதில் மகிழ்வெய்தினர். அன்பினுல் தன்னை மறந்து ஸ்ரீரகுநாதன் திருவடிகளைப் பணிவுடன் வணங்கிப் "பகவானே! என்னைக் காக்க வேண்டும், காக்கவேண்டும்" என வேண்டினர்.

325-326. ஸ்ரீ ராகவன் ஹனுமானைத் தன் தாமரைத் திருவடிகளினின்று தூக்கினுர். ஆனுல் ஹனுமானே தன்னை மறந்து அதி ப்ரேமையினுல் திருவடிகளை விடவே இல்லை ப்ரபுவின் திருக்கர கமலங்கள் ஹனுமாரின் தலையை அனுக்ரஹித்துக் கொண்டேயிருந்தன. இந்நிலையைக் கதைகூறும் சிவபெருமான் சிந்திக்கவே பிரேமையில் மூழ்கியதைக் கண்ட லோகமாதாவாகிய பார்வதி தேவியும்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

ஹனுமாரின் பரமபாக்யத்தை நினைத்து நினைத்து ஆனந்தக்கடலில் திளைத்தனள்.

327-328. பின் கைலாஸவாஸியான மகா தேவன் மனந்தெளிந்து அழகிய கதையைத் தொடர்ந்து கூற ஆரம்பித்தார். அதாவது "ஹே பார்வதி! கேள். ஸ்ரீரகுகுலதிலகன் ஹனுமாரை அன்புடன் தூக்கி மார்புற ஆலிங்கனஞ் செய்து கைகளை ஆதரவுடன் பற்றி அருகில் அமர்த்திக் கொண்டார்.

329-330. இராமர் "ஹே! வானரத்தலைவ! இராவணனால் பாதுகாக்கப்படும் இலங்கையின் அமைப்பையும், எவ்விதம் அதனை நெருப்பிட்டாய்" என்பதையும் கூறுக" எனவே இராமன் உற்சாகத்துடனிருப்பதைக்கண்டு ஹனுமார் தற்புகழ்ச்சியில்லாமல் அனைத்தையும் எடுத்துரைத்தார்.

331-333. "ஹே பிரபு! வானரம் நிகழ்த்தும் வீரச்செயல் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரம் தாண்டுதல் அதுபோன்றே நானும் கடலைத்தாண்டி இலங்கையை நெருப்பினால் சுட்டெறித்தேன். அசோகவனத்தை நாசம் செய்தேன். அரக்கர்களையும் தாக்கிக் கொன்றேன். அவ்வனைத்தும் தங்களது

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

திருவருளினாலேயே நிகழ்ந்தனவேயன்றி என் பராக்ரமத்தால் அல்ல"

334. "எவருக்குத் தாங்கள் துணை செய்கிறீர்களோ அவருக்கு அருமைச் செயலொன்றுமில்லை. தங்களது பௌருஷத்தினால் துச்சமான பஞ்சும் கூடப் பெரிய பாடவாக்னியை எரித்துவிடும் வன்மையுடையது என்பது திண்ணம்."

335–336. "கிருபை செய்து பரமபரிசுத்தமான உறுதியான சிவனாருக்குப் பிரியமான பக்தியை எனக்கு அனுக்ரஹியுங்கள்" என வாயுகுமாரன் வேண்டவே "அப்படியே ஆகட்டும்" என்று ஸ்ரீரகுராமர் அருள் பாலித்தார் எனப் பார்வதிக்குப் பரமசிவனார் மனமகிழ்ச்சியோடு கூறினார்.

337–338. "ஹே உமையே! ப்ரபுவின் குணகணங்களை உணர்ந்தவன் ஹரி பஜனத்தைத் தவிர வேறு புரியான். எவன் மனதில் பக்தியுடன் இந்த ஸ்ரீராம ஆஞ்சனேயன் ஸம்பாஷணையை ஸ்மரிக்கின்றானோ அவனுக்குப் பிரபுவின் திருவடிகளில் பரமபக்தியுண்டாகும்' என்று மேலும் தொடர்ந்து கூறினார் கைலாஸவாஸி,

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

339–340. இராமனது இனிய வார்த்தைகளைக் கேட்ட வானர ஸமூஹம், 'ஹே கருணைக் கடலே! பேரின்ப நிலையே! தங்களுக்கு வெற்றியுண்டாகட்டும்" என முழங்க, ஸ்ரீ ராமன் வானரராஜ சுக்கிரீவனைச் சேனைகளை வகுத்து இலங்கைக்குப் புறப்படத் தயாரிக்க உத்தரவளித்தார்.

341–342. அவ்வாறே சுக்கிரீவன் சேனாபதிகளை அழைத்துச் சைன்யங்களை அணிவகுக்கக் கட்டளையிட்டான். இதனைக் கண்ட அமரர்கள் ஆனந்தத்தினால் விண்ணிலிருந்து பூமாரி பொழிந்தனர்

343. சுக்கிரீவனது ஆக்ஞையினால் சேனாபதிகள் தங்கள் தங்களது படைகளை வரிசை வரிசையாக நிறுத்தினர். உடனே பலசாலியான வானரங்கள், கரடிகளின் அணிகள் அழகாக அமைந்து ஆரவாரித்தன.

344–345. படைவீரர்களனைவரும். பிரபுவின் பாதாரவிந்தங்களைப் பயபக்தியுடன் வணங்கி வீர கர்ஜனை புரிந்து நின்றனர். ஸ்ரீரகுவீரனும் பரம கருணையுடன் வானரப் படைகளை அருள் பாலித்து நின்றார்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

346-347. ஸ்ரீராகவனது திருவருள் துணையினால் ஒவ்வொரு வானர சேனாதிபதியும் இறக்கை கொண்ட மலையைப்போன்று கம்பீரமாகத் தோன்றினார்கள். இவற்றைக் கண்ணுற்ற ஸ்ரீராமபிரானும் மன அமைதியுடன் நல்ல முகூர்த்தத்தில் சேனையை இலங்கை செல்ல அனுமதிக்க, நற் சகுனங்கள் பல தோன்றின.

348-349. எந்தப் பிரபுவின் திரு நாமங்களே மங்களம் அளிக்க வல்லனவோ அந்தப் பிரபுவின் பிரயாணகாலத்தில் தோன்றிய சுப சகுனங்களை வருணித்தல் என்பது கேவலம் நீதியைத்தான் தெரிவிக்கும். பரமனின் பயணத்தை ஸீதாதேவி தன் இடதுபுற அவயவங்களின் துடிப்பினால் உணர்ந்தாள்.

350-351, அன்னைக்கு எவை நற் சகுனங்களாயினவோ, அவை அரக்கர் கோனுக்குத் துர்ச் சகுனங்களாயின. இலங்கைப் பயணமான வானரப் படைகளின் எண்ணிக்கையையோ வீர கர்ஜனையுடன் அணிவகுத்துச் செல்லும் அழகையோ எவராலும் எடுத்தியம்ப முடியாது.

352-353. நகங்களையே ஆயுதமாகக் கொண்ட வானரப்படைகள் கைகளில் பெரிய பெரிய பர்வ

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

தங்களையும் விருஷங்களையும் தாங்கித் தங்கள் விருப்பப்படி ஆகாயமார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் தாவிக்குதித்து திக்பாலர்கள் திகிலடையும்படி கர்ஜனையுடன் சிங்கங்கள் அணிவகுத்துச் செல்வது போல் அட்டகாசத்துடன் சென்றன.

354-355. அப்பொழுது அஷ்டதிக் கஜங்கள் நிலைகுலைந்து பிளிறின. பூமி நடு நடுங்கியது. மலைகள் உருண்டன. கடல் பேரலைகளுடன் அல்லோ கல்லோமாகியது. சூரியன், சந்திரன், நிர்மலமாக ஒளி வீசின. தேவதைகள், முனிவர்கள், யக்ஷர் கின்னர்களது துன்பம் தூரத்தில் விலகியது. கோடிக்கணக்கான வானரங்களும், கரடிக் கூட்டங்களும் வீர கோஷத்துடன் தாவிக் குதித்துக்கொண்டும் ஸ்ரீ ராகவனுடைய வெற்றி முழக்கம் செய்து கொண்டும், குணகணங்களை உரையாடிக்கொண்டும் ஆரவாரத்துடன் சென்றன.

355. வானரப் படைகளின் அணிவகுப்பைத் தாங்காத ஆதிசேஷனும் பலதடவை மூர்ச்சித்துத் தன்னைத் தாங்கும் பெரிய ஆமையின் முதுகைப் பற்களால் பற்றினான். அது, அதிக இன்பமளிக்கும் ஸ்ரீ ராகவனது பிரயாணத்தையறிந்து ஆதிசேஷன்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

பவித்ரமானதும் அசைவற்றதுமான அவ்வாமை முதுகில் யுத்த யாத்திரையை விரித்தெழுவதுபோல இருந்தது.

358. இவ்வழகிய திருக்கோலத்துடன் இராகவன் ஸமுத்திரக் கரையையடையவும், சைன்னியங்கள் ஆங்காங்குள்ள காய்கனி வர்க்கங்களை அருந்தி ஆனந்தங்கொண்டன.

359-360. இஃதிங்கனமிருக்க இலங்காபுரியில் ஹனுமார் தீயினால் நாசம் செய்ததிலிருந்து அரக்கர்களனைவரும் பலவாறு சிந்திக்கலாயினர். இனி அரக்கர் குலத்திற்கு உய்வில்லை என்று தங்கள் தங்கள் க்ருஹங்களில் கூடிப் பேசினர்.

361-362. "எத்தூதுவனுடைய பராக்ரமத்தை வருணிக்க முடியாதோ அத்தூதுவன் இங்கு வந்ததினால் எப்படி நன்மை உண்டாகும்" என்றெல்லாம் பலவிதமாகப் பேசுவதைக் கேட்ட மந்தோதரி மனதில் மிக மயக்கமுற்றாள்.

363-364. அந்தப்புரத்தில் தன் கணவனைச் சந்தித்து கைகூப்பி, வணங்கிப் பாதங்களைப் பிடித்துக்கொண்டு, எம்பிறையே! பகவானிடம் உள்ள பகைமையை அகற்றி, நான் கூறும் ஹிதமான

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

வசனங்களை நன்கு கேட்டு மனத்திற்கொண்டு ஆலோசியுங்கள்."

365-366. "எந்தத் தூதனின் அற்புதத் திருவிளையாடல்களைக் கேட்டமாத்திரத்தில் அரக்கியரது கருப்பம் சிதைவுறுகின்றதோ, ஹே நாத! நமக்கு நன்மை ஏற்படவேண்டுமானால் மந்திரிகளை அழைத்து, அவர்களுடன் அந்த ஸ்ரீ ராஜாராமனது மனைவியை அனுப்புங்கள்."

367-368. "உங்களது குலமாகிய தாமரைத் தடாகத்திற்குத் துன்பமளிக்கும் பனிகாலத் திரவு போன்று ஸீதை வந்திருக்கின்றாள். ஹே பிரபுவே! ஸீதாதேவியை இராமனிடம் அனுப்பாதவரை நமக்கு அயனும் ஹரனும்கூட அநுகூலம் செய்ய முடியாது.

369. "எதற்குள்ளாக ராக்ஷஸக் கூட்டங்களாகிய தவளைகளை ஸ்ரீ ராமபாணமாகிய பாம்பு விழுங்க வருகிறதோ அதற்குள்ளாக ஆணவத்தை அகற்றிச் சீதாதேவியை ராமனிடம் ஒப்படைக்கும் வழிகளைத் தேடுங்கள்."

370-371. உலகப்பிரஸித்தமான அகங்காரத்தின் இருப்பிடமாகிய இராவணன் மந்தோதரியின்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

அழகிய வசனங்களைக் கேட்டு ஏளனஞ் செய்து நகைத்து, "ஸ்திரீகளின் ஸ்வபாவம் எப்பொழுதும் பயமுள்ளது என்பது முற்றிலும் உண்மை. அவர்கள் நற்செயல்களிலும் பயப்படுகின்றனர். அவர்களது மனது மிகவும் கோழையானது."

372-373. "வானரப் படைகள் இங்கு வரின் அவுணரது படைகள் அவற்றை விழுங்கிவிடும். அவ்வளவுதான். எவனைக்கண்டு லோகபாலர்கள் நடுங்குகின்றனரோ அப்படிப்பட்டவனுகிய என் மனைவியா இப்படிக் கோழையாயிருப்பது. இது நகைப்பிற்கு இடமாகிறது" என்றுன் மேலும்.

374-375. இவ்வாறு கூறி அவளை மார்புற அணைத்துத் தேற்றி, ஆணவத்துடன் அவை நோக்கி சென்றுன். மந்தோதரி "நம் தலைவனுக்கு விதி விபரீதமாகிவிட்டது" என்று கவலைதோய்ந்த மனத்துடன் வருந்தினுள்.

376-378. இராவணன் ஆடம்பரத்துடன் அவையில் ஆஸனத்திலமரும்பொழுதே வானர ஸைன்யங்கள் கடற்கரையையடைந்த செய்தி கேட்டனன். உடனே தனக்கு அவற்றை அழிக்க அனுமதி கொடுக்க அமைச்சர்களை வேண்டவும், அவர்கள்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

புன்னகையுடன் " அரசே! தாங்கள் மன அமைதி பெறுங்கள். தானவர்கள், தேவதைகள் முதலி யோரை சிரமமின்றி வென்ற தங்களுக்கு இக்குரங்கு களும், மனிதர்களும்எம்மாத்திரம்? " என வணக்கத் துடன் தெரிவித்தனர்.

379. மந்திரி, வைத்தியன், ஆசாரியன் இம் மூவரும் பயம் பேராசையுடன் முகஸ்துதியாகப் பேசினால் அரசு, உடல், தர்மம் ஆகிய மூன்றும் விரைவில் நாசமடையும் என்பது உயர்நீதி மொழி.

380-381- இராவணனுக்கு இந்நீதியே துணை யாயிற்று. மந்திரிகள் பலவாறு இராவணனைத் தற் புகழ்ச்சி செய்தனர். அவைகளைக் கேட்டு அரக்கர் கோனும் அதிக கர்வம் அடைந்தான். இத் தருணத்தை அறிந்தே விபீஷணன் அவையை அடைந்து அண்ணனின் அடியிணைகளைத் தாழ்ந்து பணிந்தான்.

382-383. விபீஷணன் சகோதரனை வணங்கி ஆசனத்திலமர்ந்து அனுமதி பெற்றுத் தன் கருத்தை கூறினான். " ஹே தயாநிதியே! நீங்கள் எவ்விஷ யத்தைக் கேட்டீர்களோ, அதைப்பற்றி நான் என் அறிவுக்கு எட்டியவாறு சிறிது இயம்புகிறேன் ".

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

384-385. "தாங்கள் நன்மை, புகழ், பெருமை, நல்லறிவு, நல்வாழ்வு, நற்பேறு இவைகளை விரும்பினால், ஹே ப்ரபுவே! அந்நிய ஸ்திரீயாகிய ஸீதையைச் சுக்ல பக்ஷத்து நான்காம் பிறையைப் போல் பார்க்கவே கூடாது.

386-387. "பதினான்கு உலகத்திற்கும் தலைவனா யிருந்தாலும் ஒரு சிறு பிராணியுடன் பகை கொண்டால் அவன் நிலைத்திருப்பதரிது. நல்ல சாமர்த்திய மும், நற்குணங்களும் நிறைந்த மனிதன் சிறிதளவு பேராசை கொண்டால் அவனை ஒருவரும் விரும்பார்."

388. "தலைவ! காமம், கோபம், மதம், பேராசை ஆகியவை நரகத்தை விரைவில் அடைவிப்பவை. இவற்றைத் தியாகம் செய்து பரிசுத்தனாய் ஸ்ரீ ரகுகுலதிலகனைப் பஜி. இதுவே இதிஹாஸ வேதபுராணங்களில் கூறப்படும் உண்மை."

389-390. "இராமர் மனிதர்களுக்கு மட்டும் மன்னன் அல்லன். அனைத்துலகிற்கும் ஒருவரான அதிபதி. காலனுக்கும் காலன். அவரே பரவஸ்து. தோஷங்களற்றவர். பிறப்பற்றவர். எங்கும் நிறைந்தவர். யாவராலும் வெற்றிகாண முடியாதவர்."

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

391-392. "பசுக்கள், மறையவர், தேவதைகளாகியோருக்கு நன்மை பயப்பவர். கருணைக்கடல். அவரே விரும்பி மனித வடிவம் தாங்கி நிற்கின்றார். அடியவருக்கு ஆனந்தமும், துஷ்டர்களுக்குத் துன்பங்களையும் கொடுப்போர். தர்மம், தேவதைகள் இவற்றைப் புரப்போர் அவரே."

393-394. "அப்பிரபுவுடன் பகைமை அகற்றிப் பாதகமலங்களை வணங்கினால் அடைக்கலம் அடைந்தோரைக் காக்கும் காகுஸ்தன் நம்மையும் பாதுகாப்பார். ஜானகி தேவியை ஜயராமனிடம் ஒப்படைத்துக் காரணமின்றியே அருள் பாவிக்கும் ஐயன் ஸ்ரீராகவரைப் பஜிப்பாய்"

395-396. "உலகமனைத்திற்கும் கொடுமை செய்த பாபியாயினும் தன்னைச் சரணடைந்தால் ஸ்ரீராகவர் அவனைக்கைவிடுவதில்லை. ஹே இராவண! நன்கு சிந்தித்துப்பார். ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் ஆகிய மூன்றுவித தாபங்களையும் தகிக்கும் ஆற்றலுடைய ஸ்ரீராமநாமாவையுடைய ப்ரபு ஜகதீஸ்வரனே இராமனாய் அவதரித்துள்ளார் என்று உணர்வாய்."

397. "ஸஹோதரனே! நான் பலதடவை திருவடிகளில் பணிந்து பணிவுடன் தெரிவிப்பது, அகங்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

காரம், அறியாமை, கர்வம் முதலியன விட்டு விட்டுக் கோசல நாட்டதிபன் ஸ்ரீராகவனைப் பஜி."

398. "தந்தைக்கொப்பானவனே! நம் பிதாமஹ ராகிய புலஸ்திய முனிவர் தன் மாணுக்கரிடம் இதையே கூறி யனுப்பித்தார். அதனை நற்சமயத்தில் தங்களிடம் தெரிவித்தேன்" என்ருன் விபீஷணன்.

399-400. அத்தருணத்தில் மால்யவான் என்ற மிகவும் சாமர்த்தியசாலியான மந்திரி விபீஷணன் கூறியதைக்கேட்டு மனம் மகிழ்ந்து, "எம் தலைவ! தங்கள் தம்பி விபீஷணன் நீதிகளுக்கு இருப்பிட மானவன். அவன் கூறியதை மனதிற் கொள்ள வேண்டும்" என வேண்டினுன்.

401-402. இவைகளைக்கேட்ட இராவணன் கோபங்கொண்டு "எதிரிகளின் பெருமைகளைக் கூறும் இவர்களை அகற்ற இங்கு ஒருவருமில்லையா?" என, மால்யவான் வருந்தித்தன் அரண்மனைநோக்கிச் சென்ருன். ஆனல் விபீஷணன் மறுபடியும் கை கூப்பிக் கூறலாயினன்.

403-404. "தலைவனே! நல்லெண்ணம், தீய எண்ணம் இரண்டும் எல்லாருடைய மனதிலேயே

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

இருக்கின்றன. நல்லெண்ணமுடையவர் பெரும் பாக்கியங்களையும் தீய எண்ணமுடையவர் பெரும் துன்பத்தையும் பெறுகின்றனர். இது மறை யோதும் நீதி''

405-406. "உன் மனதில் தீய எண்ணம் குடி கொண்டிருப்பதால் எல்லாவற்றையும் தலைகீழாக எண்ணுகிறாய். நன்மையைத் தீமையாகவும், விரோதியை மித்ரனாகவும் கருதுகின்றாய். அரக்கர் குலத்தின் காலராத்ரி ஸ்வரூபமாகிய ஸீதாதேவியை மிகப்பிரியமான பொருள் என நினைக்கின்றாய்''

407. "உன் திருவடிகளை வணங்கிக் கேட் கின்றேன். என் இனிய பேச்சைப் பின்பற்று. அன்னையை ஐயனிடம் ஒப்படைப்பாய். அதனால் மிகவும் நன்மையைப் பெறுவாய்.

408-409. வேதபுராணங்கள், புத்திமான்கள் விரும்பும் இனிய நல்லுரைகளை விபீஷணன் கூறி முடித்ததுமே இராவணன் ஆறாச் சினத்துடன் துள்ளியெழுந்து அட துஷ்ட! உனக்கு யமன் பக்கத் தில் வந்துவிட்டான்.

410-411. "மூர்க்கனே! என் அன்னத்தால் வாழும் நீ எதிரிகளையா புகழ்கின்றாய்? கூறடா

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF.

நீசனே ! இவ்வுலகில் என்னை வெற்றிகொள்ள யாரடா இருக்கின்றனர்? ''

412–413. '' என் நகரிலேயே வாழ்ந்து முனிவர்களுடன் நட்புக்கொள்கின்ருய். அங்கேயே செல்லடா. அவர்களுக்கே உன் புத்திமதிகளைப் புகல்வாய்'' இவ்விதம் கூறிக்கொண்டே தன்னை வணங்கும் தம்பியைப் பலவாறு உதறித்தள்ளியும் விபீஷணன் அண்ணன் அடியிணைகளை விட்டுப்பிரியவில்லை.

414-416. '' ஹே பார்வதி ! தனக்குத் துன்பங் கொடுத்தாலும் அவருக்கு நன்மை புரிவதுதான் பெரியோரது பெருமை. எனவே விபீஷணன் '' எந்தந்தையே! நீ என்னைப் பலவாறு நிந்தித்தாய். அது எனக்கு நன்மையே. ஆனாலும் உனக்கு நல்வாழ்வு ஸ்ரீ ராமனின் பஜனத்தினுல்தான் உண்டாகும்'' என்று கூறிக்கொண்டே தன் மந்திரிகளுடன் ஆகாய மார்க்கத்தில் தாவிக்குதித்து யாவருமறிய இவ்விதம் கூறினுன்.

417. '' பிரபு ஸ்ரீராகவர் ஸத்யத்தை நிலைநாட்டுபவர். தீர எதையும் விசாரித்தே செய்வார். உன் அவை இக்கணத்திலிருந்து அந்தகனின் அடைக்கலமாயிற்று. இப்பொழுதே நான் ஸ்ரீரகுவீரனைச்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

சரணடைகின்றேன். என்னை மாசுபடுத்தாதே” என்றான்.

418-419. விபீஷணன் இவ்விதம் கூறிச் சென்றதும் அரக்கர்களின் ஆயுளும் குறைந்தது காரணம் ஹே! பார்வதி! சாதுக்களுக்கு அவமரியாதை செய்வது எல்லா நன்மைகளையும் நாசம் செய்துவிடும் என்பதுதான். என்று மகாதேவன் கூறினான்.

420-421. விபீஷணனைப் பிரிந்த இராவணன் ஐசுவரியங்களைப் பிரிந்தவன்போலானான். மன நிம்மதியுடன் பலவாறு எண்ணிக்கொண்டே ஸ்ரீ ராகவரின் சமீபம் அடைந்தான் விபீஷணன்.

422-425. “எந்தப் பாதாரவிந்தங்கள் அடியவருக்குப் பேரானந்தமருளுகின்றனவோ; கௌதம முனிவரின் பத்னியாகிய அகல்யையைப் புனிதமாக்கினவோ; தண்டகவனத்தைப் பரம பாவனம் செய்தனவோ; மைதிலீதேவியார் மனதில் எவற்றைத் தியானித்துத் துன்பத்தை ஸஹித்துத் கொண்டிருக்கிறாளோ; மங்கள ஸ்வரூபியான மஹாதேவனின் மனமாகிய தாமரைத் தடாகத்திற்கு எவை அழகிய செந்தாமரை மலர்களோ;

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

அவ்வழகிய சேவடிகளைத் தரிசித்துப் பெறும் பாக்கியம் பெறுவேன், இப்பொழுதே."

426-428. "பரதனது மனத்திற்குப் பிரியமான பாதுகைகளை எவை அநுக்ரஹித்தனவோ. அச் சரணங்களை என் கண்களால் இன்று தரிசிக்கப் போகிறேன்" என்று கூறிக்கொண்டு பரமபக்தி யுடன் அக்கணமே இலங்கைக் கரையை விட்டு கடலைத் தாண்டி இக்கரை வந்த விபீஷணனை வானரங்கள் எதிரியின் சிறந்த ஒரு தூதன் என நினைத்தனர்.

429-430. அவனை அங்கேயே நிறுத்திவிட்டு வானரங்கள் தன் மன்னனிடம் கூற அவனும் ஸ்ரீராமனையடைந்து, "எதிரியின் இளைய தம்பி தங்களைச் சந்திக்க வந்துள்ளான்" என்று தெரிவித்தான்.

431-432. அதற்கு ஸ்ரீராமன், "நண்பனே! அவன் வரக்காரணம் அறிந்தனையோ?" என வினவ "மனிதர்குல மாணிக்கமே! தன் விருப்பப்படி வடிவெடுக்கும் தானவரது மாயையை நான் அறியாததினால் இவன் வருகையின் காரணம் அறிகிறேன் இல்லை" என்றான் வானரராஜன் சுக்ரீவன்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

433-435. "ஆனால் இத்துஷ்டன் நம்மிடையே பிளவு உண்டாக்க வந்திருக்கலாமென நான் கருது வதால் இவனைக்கட்டிப்போடுவதே நலம்" என்று தொடர்ந்து கூறவே "தோழனே! நீ கூறியது உயர் நீதியேயாயினும் அடைக்கலமடைந்தோரை ஆதரிப் பது என் சபதம்" என்று ஸ்ரீரகுநாயகன் திருவாய் மலர்ந்தருள அதைக்கேட்ட ஹனுமார் 'சரணம் அடைந்தோரைக் காக்கும் பரம கருணாநிதி நம் நாயகன்' என மனதில் அறிந்து மட்டற்ற மகிழ்வுகொண்டான்.

436. ஸ்ரீராமபிரான் "குரங்கினத்தரசே! சரண மடைந்தோரைக் காப்பதால் தமக்குத் தீமை வரும் என நினைத்து எவன் புறக்கணிக்கின்றானோ, அவனே அறிவற்றவன், மகாபாபி, அவனைப் பார்த்தால்கூட நமக்கு தீமை நேரும்."

437-440. "கோடிக்கணக்கான மறையவரை கொலை செய்த பாபி என்னை அடைக்கலம் அடைந் தாலும் அவனைக் கைவிடமாட்டேன். என் முன் வந்த எவராயினும் அவரது கோடிக்கணக்கான பிறவிகளில் இயற்றிய பாபங்களை நாசம் செய்வேன். ஆனால் இயற்கையாகவே பாபிகள்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

ஏன்னைப் பஜிக்கமாட்டார்கள். மாசுடைய மனம் உடைய பாபிகள் எவ்விதம் என் முன்னிலையில் வருவார்கள்."

441-445. "மாசுமருவற்ற மனதுடையவரே என்னையடைகின்றனர். கள்ளம் கபடமுடையவரை நான் வெறுக்கிறேன். இராவணன் நம்மிடையே பிளவு உண்டாக்க இவனை அனுப்பியிருந்தாலும் அதனுல் அச்சமோ, அல்லலோ நமக்கில்லை. ஆருயிர் தோழனே! உலகிலுள்ள அரக்கர் அனைவரும் ஒருங்கு திரண்டாலும் ஒரே கணத்தில் மாய்க்கும் மகிமை உள்ளவன் என் இளையோன் இலக்குவன். மேலும் அவ்வரக்கனே பயந்து என்னை அடைக்கலம் அடையின் அவனை என் இன்னுயிருக்கு நிகராகக் கருதுவேன். நமக்குத் துரோகம் செய்ய நினைத்தாலும் சரி, அல்லது சரணடைய மனதுடையவராய் இருந்தாலும் சரி; அவனை அழைத்துவா இக்கணமே" என இராமர் கருணை தோய்ந்த புன்னகையுடன் திருவாய்மலர்ந்தருளவே, "கருணைக்கடல் காகுத்தனுக்கு வெற்றியுண்டாகுக" என வீர முழக்கத்துடன் அங்கதன் ஹனுமார் புடைசூழச் சென்றுன்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

446-447. வானரங்களால் அழைத்துவரும் போதே பேரானந்தமளிக்கும் இளையபெருமாளுடன் கூடிய இராமரைக் கண்குளிரக் கண்டானந்தங் கொண்டான் விபீஷணன்.

448-451. பேரொளி பரப்பும் பெருமானைப் பார்த்த மாத்திரத்திலேயே நிலை தடுமாறிச் சிறிது தடைப்பட்டு ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு பிரபுவின் நீண்ட புஜங்கள்; செந்தாமரைக் கண்கள்; கார்முகில் மேனி; சரணாகதியடைந்தோரைக் காக்கும் நிலை; சிங்கத்திற்கொப்பான அழகிய கழுத்து; பரந்து விரிந்த அழகிய மார்பு; கோடி மன்மதனை நிகர்த்த அழகொழுகும் திருமுக மண்டலம் இவற்றைக் கண்டு விபீஷணன் ஆனந்தத்தினால் ரோமாஞ்சம் கொள்ள, மனதில் ஒருவாறு தைரியங்கொண்டு இனிமையாகப் பேச ஆரம்பித்தான்.

452-454. "தேவதைகளைக் காப்பவரே! ராக்ஷஸ குலத்தில் தோன்றியவன் நான். இராவணனின் சிறிய தம்பி. எவ்விதம் ஆந்தை இருளை விரும்புகின்றதோ அதுபோன்று தமோகுண ஸ்வபாவமுள்ள இந்த அரக்கரது உடலுக்குத்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

தகுந்த பாபங்களில் பற்றுடையேன். தங்களது பெரும் புகழையும் பிறவிப்பெருந்துன்பமகற்றும் பெருந்தன்மையையும் கேட்டு, அடைக்கலமடைந்தோரை ஆதரிக்கும் ஸ்ரீ ரகுகுலதிலக! உம்மைச் சரணடைந்தேன். என்னைப் பாதுகாக்கவேண்டும்" என்று தெரிவித்தான்.

455-456. இவ்விதம் கூறிக்கொண்டு அடியற்ற மரம்போல் ஐயன் அடியிணைகளை வணங்க ஸ்ரீ ராமர் மிகவும் மகிழ்ச்சியுடன் அவனைத் தூக்கி மார்புடன் நீண்ட கைகளால் அணைந்துகொண்டார்.

457-458. தன் இளையோன் இலக்குமணனுடன் அவனை அருகில் அமர்த்திக்கொண்டு அடியவர்க்கு இன்பமளிக்கும் இன்னுரைகளைப் புகன்றார். "இலங்கைச் செல்வனே! உன் சுற்றம் சூழ நீ சுகமாக வாழ்கின்றனையா? ஏனெனில் அரக்கர் நடுவில் அல்லவா நீ வாஸம் செய்கிறாய்."

459-460. "தோழனே! அல்லும் பகலும் அற்பர்களிடை வாழும் நீ எவ்விதம் அறச் செயல்கள் புரிகின்றனை? உன் நிலை யான் அறிவேன். நீ சிறந்த நீதிமான். உனக்கு ஒருபொழுதும் அநீதிகளில் பற்றுக் கிடையாது."

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

461-462. "பிரியமுள்ளவனே! அயனுல் தியோாது உறவைக் கொடுப்பதைவிட, நரக வாழ்வளிப்பது மிக நல்லது அல்லவா?" என்ருர் ஸ்ரீரகு நாயகர். உடனே விபீஷணனும், "ஹே ராம! தன் அடிமையென நினைத்து என்னைக்காத்த தங்களது சரண கமலங்களது தரிசனத்தால் நான் சுகவாழ்வு பெற்றேன்."

463. "சோகத்திற்கு இருப்பிடமாகிய பற்பல பேராசைகளை விட்டொழித்து எவனொருவன் ஸ்ரீ ரகுராமனைப் பஜிக்கவில்லையோ அவனுக்கு ஒரு பொழுதும் நன்மை கிடையாது. சுவப்பனத்திலுங் கூட அவனுக்கு மனச்சாந்தி கிடைக்காது."

464-465. "எவனுடைய ஹிருதயத்தில் அறையில் அழகாக ஆடி ஆசையும் உடைவாளுடைய கோதண்டபாணி வசிப்பதில்லையோ அவனுடைய மனதில் லோபம், மோஹம், அசூயை கர்வம், அகம்பாவம் முதலிய தீய பண்புகள் செறிந்து வாசம் செய்யும்."

466-467. "நான் எனது என்ற ஆணவரூபமாகிய காரிருளை ராகம் துவேஷரூபமாகிய ஆந்தைகளே விரும்பும், அவ்விருள் தங்களது பக்தி

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

மஹிமையாகிய சூரியோதயத்தால்தான் நீங்கும். அதுவரை ஜீவர்களது மனதில் அது நிலைத்து வாழும்"

468-469. ஹே ராம! தங்களது பாதாரவிந்த தரிசனத்தால் எனது பெரும்சுமையாகிய துன்பம் நீங்கிவிட்டது. நான் பேரானந்தத்துடனிருக்கிறேன் தங்களது அனுக்ரஹம் பெற்றவருக்கு மூவிததாபங்களினுலேற்படும் துன்பம் கிடையாது."

470-471. "ஒருபொழுதும் நான் நற்கருமங்கள் செய்யாதவன். தாழ்ந்த குணங்கள் நிறைந்த அரக்கன். அப்படிப்பட்ட என்னை முனிவர்களது மனதிலும்கூட எவருடைய ஸ்வரூபம் நிலைத்திருப்பதில்லையோ அத் திருவுருவம் கொண்ட தாங்கள் முன் நின்று அருள் மழைபொழிந்து மார்புற ஆலிங்கனம் செய்துகொண்டீர்கள்."

472. "கருணைக்கடலே, ஆனந்தவெள்ளமே! எத்திருவடித் தாமரைக்கு ஹரன் அயன் முதலியோர்கள் பணிவிடை செய்கின்றனரோ அப்பெருமையுடைய சேவடிகளைக் கண்ணாரக்கண்டு மகிழ்வது எனது அளவிறந்த பெரும் பாக்கியந்தான்." என்றான்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

473-474. உடனே ஸ்ரீரகுவீரன், "தோழனே! என் இயற்கைக் குணத்தைக் கூறுகின்றேன், கேட்பாயாக. எல்லாவுயிர்களுக்கும் துன்பங் கொடுக்கும் மனிதனுயிருந்தாலும் நடுநடுங்கி எவன் பாதாரவிந்தங்களில் அடைக்கலமாகின்றானோ அவனை நான் பாதுகாப்பேன். இதனை காகபுசுண்டர் என்ற முனிவரும், சிவபிரானும் உமாதேவியாரும் நன்கறிவர்."

475-478. "மோஹம், கபடம், சூது முதலிய தீயகுணங்களை விட்டொழித்துவரும் மனிதர்களை உடனேயே சாதுக்களுக்குச் சமமாக்கிவிடுவேன். தாய், தந்தை, உற்றார், உறவினர், புத்திரமித்ராதியர்கள், களத்திரம், உடல், பொருள், வீடு, நிலம், முதலியவைகளில் வைக்கும் அபிமானமாகின்ற நூல் கயிறுகளாலாகிய பெரும்கட்டுக்களை அறுத்தெறிந்து மனதில் என் சரணாரவிந்தங்களைத் தியானிப்பவனே அனைத்தையும் ஒன்றுபோல் காணும் ஸமதர்சியாவான், அவனுக்குப் பேராசைகளோ, அசூயையோ, சோகமோ, பயமோ கொஞ்சமேனும் மனதில் உண்டாகாது."

479-480. "எவ்விதம் லோபியின் மனதில் பணமே நிறைந்து வாழ்கின்றதோ அதுபோல என்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

மனதில் இப்படிப்பட்ட சாதுக்களே நிவாஸம் செய்கின்றனர், உன்னைப்போன்ற சாதுக்களே எனக்கு மிகவும் பிரியமானவர்கள். அவர்களுக்காகவே நான் அவதரித்தேன்,''

481. '' எவன் சங்கு சக்ரம் கதை கோதண்டம், தரித்த சர்வாலங்கார ஸௌந்தர்யம் செறிந்த என் திரு உருவத்தியானமாகிய சகுணப் ப்ரஹ்மத்தை உபாசிக்கின்றானோ; எவன் அயலாரின் நலன்களில் ஈடுபட்டிருக்கின்றானோ; எவன் நீதி, கட்டுப்பாடு இவைகளில் உறுதியான பற்றுடையவனோ; எவன் வேதசாஸ்திரபுராண இதிகாசங்களின் உண்மையறிந்து உயர்வழி நடக்கும் ப்ராஹ்மணோத்தமர்களை வணங்கி அன்புடன் ஆதரிக்கின்றானோ அவனே என் இன்னுயிருக்குச் சமமானவன்.''

482-483, ''ஹே இலங்கை வேந்தனே! இவ்வனைத்தும் உன்னிடத்தில் காணப்படுவதால் நீ எனக்கு மிகவும் பிரியமானவன்.'' எனத் திருவாய் மலர்ந்தருளியதைக்கேட்ட வானரச்சேனைகள் ''கருணாநிதி ஸ்ரீராகவன் வெற்றி பெறுக'' என ஜெயகோஷமிட்டனர்.

484-485. விபீஷணும்வார் பிரபுவின் கருணை மொழிகளைக்கேட்டு அமுதத்திற்கும் மேலான

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

ஆனந்தம்கொண்டார். செந்தாமரைத்தாளிணைகளை உறுதியாகப்பற்றி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். மனதில் பக்திப்பிரேமை கட்டுக் கடங்காமல் கரை புரண்டோடியது.

486-487. ஹே, அகிலலோக ரக்ஷகனே! சரண் அடைந்தோரைக் காப்பவர் தாங்கள். எல்லாருடைய மனதிலுள்ள எண்ணங்களை யறியும் அந்தர்யாமியாயும் தாங்கள் திகழ்கிறீர்கள். என் மனதில் முதலில் இலங்கை அரசைப்பெற ஆசை யிருந்தது. ஆனால் அது சரணாரவிந்தங்களில் செய்யும் பக்திவெள்ளத்தில் ஆழ்ந்து அழிந்து விட்டது, ப்ரபு."

488-489. "தயாநிதியே! சிவபெருமான் மனதில் எப்பொழுதும் எது ப்ரகாசித்துக்கொண்டு இருக்கிறதோ அப்படிப்பட்ட தங்களது பரமபாவன மாகிய பக்திப்ரேமையை எனக்கு அனுக்ரஹம் செய்யுங்கள்" எனப் பிரார்த்திக்கவே, ஸ்ரீராமனும் "அவ்விதமே யாகட்டும்" என அருள்பாலித்துச் சீக்கிரமாகவே ஸமுத்ர ஜலத்தைக் கொண்டுவர ஆக்ஞாபித்தார்.

490-491. "ஹே ஆருயிர்த்தோழனே! உனக்கு விருப்பமில்லையாயினும் என்னைத் தரிசித்தவருக்கு

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

எல்லாச் செல்வங்களும் கிடைக்கும்'' என்று பரிபூர்ண அனுக்ரஹத்துடன் விபீஷணாழ்வாருக்குப் பட்டாபிஷேகம் தன் கைகளினால் மனமுவந்து நிகழ்த்த, விண்ணவர் மலர்மாரி பொழிந்தனர்.

492. இராவணனுடைய சினத்தீ விபீஷணனது உபதேசமொழியாகிய பெருங்காற்றினால் கொழுந்து விட்டெரிந்து அவனைச் சுட்டெரிக்கும் சமயத்தில் ப்ரபு ஸ்ரீ ராகவர் அவனுக்குப் பாதுகாப்பளித்து, அகண்டமான இலங்கைச் செல்வத்தையே உவந்து அருளினார்.

493. பத்துத் தலைகளினால் பரம்பொருளாகிய சிவபிரானை வணங்கித் துதித்துப் பெற்ற இலங்கைச் செல்வத்தை விபீஷணனுக்கு ஸ்ரீ ராமன் தன் திருவடிகளைச் சரண் அடைந்த மாத்திரத்திலேயே அனுக்ரஹித்தார்.

494-495. இவ்வாறு உதாரகுணமுள்ள பிரபுவைத் தவிர்த்து மற்றவர்களுக்குச் சேவை செய்வோரை வாலும் கொம்புமில்லாத மிருகங்களுக்குத்தான் ஒப்பிடலாம். ஸ்ரீராமன் தன் பரம பக்தன் என்று விபீஷணனையறிந்து தன்னுடன் சேர்த்துக்கொண்டார் என்றே எல்லா வானரங்களும் நினைத்து மகிழ்ந்தன.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

496-497. பின்னர் மறுபடியும் எல்லாமறிந்தவராயும். எல்லாருடைய ஹ்ருதயகமலங்களில் வஸிப்பவராயும், சராசரங்கள் அனைத்தையும் தன் ரூபமாயுடையவராயும், சாக்ஷி மாத்திரமாக இருந்துவருபவராயும், இன்பம் துன்பங்களது தொடர்பற்றவராயும், தர்ம நியாயங்களை நடத்திக் காண்பிப்பவராயும் காரணத்தாலேயே மனுஷ்யாவதாரம செய்தவராயும் ராக்ஷஸ குலாந்தகராயும் திகழும் ஸ்ரீ ராகவன் கூற ஆரம்பித்தார்.

498-499. "ஹே சுக்ரீவ! ஹே! இலங்காதிபதி விபீஷண! வானர வீரர்களே! ஆழ்கடல் கொடிய விஷப் பாம்புகள், பெரிய பெரிய திமிங்கிலங்கள், நிறைந்து ஆழமாய் எவ்விதத்திலும் கடக்கமுடியாதவாறு காணப்படுகிறதே. எவ்விதம் இதனைத் தாண்டலாம்?" என வினவினார்.

500-501. அத்தருணத்தில் விபீஷணன், "மஹாப்ரபோ! தங்களது பாணம் ஆயிரக்கணக்கான ஆழ்கடலை அள்ளிக் குடிக்கும் தன்மையது. இருப்பினும் ஸமுத்திரக் கரைக்குச் சென்று அதனைப் பிரார்த்திப்பதுதான் நீதிநெறியாகும்" என்று வணக்கத்துடன் கூறினன்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

502. "ஹே ப்ரபுவே! தங்கள் முன்னோர் களாகிய ஸகர புத்ரர்களால் தோண்டப்பட்டதால் இச்சமுத்திரம் ஒரு முறையில் தங்களுக்குக் குலகுரு. எனவே தான் இவ்வாறு கூறினேன். இதனால் யாதொரு கஷ்டமுமின்றி நம் வானரப்படைகளும், கரடிக்கூட்டங்களும் அக்கரையை எளிதில் அடைய முடியும்" என்றான்.

503-504. பிரபுவும் "நண்பனே! நீ பொருத்த மான உபாயம் கூறினை, தெய்வத்தின் துணை கொண்டு அவ்விதம் செய்வோம்" எனக் கூறினார். இது அருகில் நின்று கேட்ட இலக்ஷ்மணப் பெரு மாளுக்குத் திருப்தியை யளிக்காததால் லக்ஷ் மணர் சிறிது மனவருத்தம் அடைந்தார்.

505-506. "என் தலைவ! தெய்வத்தின் மீது நம்பிக்கை வைக்கவேண்டுவதில்லை. மனதில் சினங் கொண்டு சீறியெழுந்து கடலை வற்ற பாணத்தால் அடித்து விடுங்கள். பயங்கொண்டவர்களுக் கல்லவோ தெய்வத்தின்மீது நம்பிக்கை. ஏனெனில் தன்னைச் சோம்பேறியாக்கிக்கொண்டு 'தெய்வச் செயல், தெய்வச் செயல்' என்று குறை கூறு கின்றனர்" என்று சிறிது கோபத்துடன் தெரிவித்தான்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

507-508. இதைக் கேட்டுப் புன்னகையுடன், "இவ்விதமே நாம் செய்வோம். மனதில் தைரியத்துடன் இரு" என்று கூறிக்கொண்டே இளைய பெருமாளை அழைத்துக்கொண்டு ஸ்ரீ ரகுநாதன் கடலருகில் சென்றார்.

509-510. முதன் முதலில் ஸ்ரீராமசந்திரன் கடற்கரையைச் சமீபித்து வருணராஜனை வணங்கிச் சமுத்திரக்கரையில் தர்ப்பங்களை விரித்து அவ்வரிய ஆசனத்தில் அமர்ந்தார். விபீஷணர் இராகவனைச் சரணடையச்சென்றதுமே இராவணன் தன் ஒற்றர்களை அனுப்பினான்.

511. அவ்வொற்றர்கள் கபடமாக வானர வேஷங்கொண்டு வானரப்படைகளின் பாசறைகளைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்தனர். சரண் அடைந்த விபீஷணனிடம் ஸ்ரீரகுநாதனுக்குள்ள அன்பையும், சிநேகத்தையும் பார்த்துப் பார்த்து அவர்கள் தம் மனதாலேயே ஸ்ரீராகவனைப் போற்றி புகழ்ந்தனர்,

512-513, பிரபுவின் குணகணங்களை அத்யந்த பிரேமையுடன் புகழ்ந்துகொணடிருப்பதால் அவர்கள் தம்மை மறந்தனர். அதனால் அவர்களது

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

மாறுவேடம் கலைந்தது. இதனைக்கண்ணுற்றனர் வானரர். உடனே அவர்களைக் கட்டிப்பிடித்துத் தங்கள் அரசன் சுக்கிரீவன் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

514-515. வானரமன்னன் அவர்களை அங்க பங்கம் செய்து அனுப்பத் தம் படைகளுக்கு உத்தர விட்டான். உடனே வானரங்கள் தாவிப் பிடித்துக் கட்டி வானரச் சைன்னியங்களைச் சுற்றிக் காட்டிக் கொண்டே இழுத்துவந்தனர்.

516-517 கபிகள் அவ்வரக்கர்களைப் பல விதத்திலும் துன்புறுத்தினர். அத்துன்பங்களைப் பொறுக்கமுடியாது அவர்கள் அலறி அழுதனர். அச்சமயத்தில் வானரங்கள் தங்கள் மூக்கையும் காதுகளையும் அறுக்கப்போகின்றனர் என்பதை உணர்ந்து "இதனை ஸ்ரீராமன் அறிந்து வருவார். நில்லுங்கள்" என்று கூக்குரலுடன் அலறினர்.

518-519. அதனைக் கேட்ட இலக்ஷ்மண ஸ்வாமிக்கு அவர்கள் மீது கருணை பெருகவே, அனைவரையும் அருகில் அழைத்துப் புன் சிரிப்பினுல் அத்தூதுவர்களைக் காப்பாற்றி "ஹே தூதர்களே! இந்தத் திருமுகம் இராவணனிடம் கொடுக்கப்பட

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

வேண்டும். அதிலுள்ள இலக்ஷ்மணனது வசனங்களை ஆழ்ந்து விசாரிக்கவேண்டும். என்றும் கூறுங்கள்" என அவர்களுக்கு உத்தரவிட்டான்.

520-522. மேலும் " ஸ்ரீ ஜகன்மாதாவாகிய ஸீதாதேவியை அழைத்துக்கொண்டு வந்து எங்களிடம் ஒப்படைத்துவிடு. இல்லாவிடில் உனக்குக் காலன் சமீபித்துவிட்டான் என்பதை உணர்ந்துகொள்" என்று நான் வாய்மொழியாக, இரக்கப்பட்டு இவ்வுத்தரவுகளைக் கூறியதாகக் கூறுங்கள்" என்று கட்டளையிடவும் அத்தூதுவர் ஸ்ரீலக்ஷ்மணஸ்வாமிகளது பாதாரவிந்தங்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துப்பலவாறு இராமனைப் புகழ்ந்துகொண்டு இலங்கையை யடைந்து இராவணனது காலடிகளில் வந்து விழுந்து வணங்கினர்.

523-524. அவர்களை நோக்கித் தசானனன் சிரித்துக்கொண்டே, "ஹே சுகசாரணர்களே! உங்கள் க்ஷேமத்தை முதலில் கூறுங்கள். பின்பு காலனின் சமீபத்தையடைந்த அந்த விபீஷணனது வரலாற்றினையும் கூறுங்கள்"

525-528. " அவ்வற்பன் இலங்கையை என்கீழ் ஆளும் பேற்றைவிட்டு விட்டான். யவை என்ற

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

தான்யத்தைத் துளைத்து வாழும் புழு, அந்த யவை யுடன் இயந்திரத்திலிட்டு அறைக்கும்போது அழிவதைப்போன்று வானரங்களை அழிக்கும்போது அவனும் அழிவான் என்பது உறுதி. காலதேவனது கட்டளையினால் அழியவந்த வானரச் சைன்னியங்களின் நிலைமைகளையும் பின்னர் கூறுங்கள் பாவம் சமுத்திரம் அல்லவோ இரக்கச்சித்தத்துடன் அவர்களைத் தடுத்துக் காக்கின்றது. எவர்களது மனத்தில் என்னைப்பற்றிப் பெரிய சுமையாகிய பயம் குடிகொண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட முனிவர்களது நிலைமைகளையும் கூறுங்கள்."

529 "எவர்களைச் சந்தித்தீர்கள்? அங்கும் என் புகழ் கேட்டுத்திரும்பினீர்களா? என் எதிரிகளுடைய சேனைகளின் பலம் பராக்ரமம், ஆண்மை முதலியன கூறுது பயத்தினால் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்றான்.

530-531. அப்பொழுது சுகன் இராவணனை வணங்கித், "தலைவனே! எவ்வளவு பரிவுடன் விரும்பிக் கேட்கின்றீர்களோ அப்படியே நான் கூறும் பதிலுரைகளைச் சினம் நீங்கிச் சிந்திக்க வேண்டுகிறேன். தங்கள் இளையோன் விபீஷணன் ஸ்ரீ ராமனைச் சரண் அடைய வரும்போதே அபயப்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

பிரதானம் அருளி, அவனுக்கு இலங்கைச் செல்வத்தையும் முடிசூட்டி அநுக்ரஹித்தார்.''

532-533. "எங்களைக் கபட வேடதாரிகள் என்று அறிந்த வானரங்கள் கட்டிப்பிடித்து உயிர் பிரிய அடித்துத் துன்புறுத்தினர். மூக்கையும் காதுகளையும் கொய்துவிட வாள்களுடன் விரைந்து வந்தவுடன் ஸ்ரீ ராமனை நினைந்து அலறியும் உடனே எங்களைக் குற்றுயிராக விட்டுவிட்டனர்.''

534-535. ''எம்மிறைவனே! ஸ்ரீ ராமனுக்குத் துணையாகிய சேனைகளின் நிலைமையைக் கேட்டீர்கள். அதனைக் கோடிக்கணக்கான வாயினலும் வருணிக்கமுடியாது. பற்பல நிறங்கொண்ட கரடிகள், வானரங்கள் பயங்கரமான உருவங்களுடன் அச்சேனை வெள்ளத்தில் நிறைந்திருக்கின்றனர்."

536-537. ''எந்தக் குரங்கு தங்கள் அருமைக் குமரன் அக்ஷயனைக் கொன்று, இலங்கையினைத் தீயினல் சுட்டெரித்ததோ அக்குரங்கின் பலம் அச் சேனை வீரர்களது பலத்தில் மிகமிகக் குறைவானது. எண்ணற்ற பெயர்களுடன் மிகச் சிறந்த கொடிய யுத்த வீரர்கள் நிறைந்து காணப்படுகின்றனர். ஒவ்வொருவரும் கணக்கற்ற போர் யானைகளின் பலமுடையவர்கள்."

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

538. "துவிதன், மயந்தன், நளன், நீலன், அங்கதன் ஆகியோர் பார்க்கப் பயங்கரமானவர்கள். ததிமுகன். கேஸரி, குமுதன். கவன், ஜாம்பவான், முதலியோர் உயர் வீரதீர சேனைத் தலைவர்கள்."

539-540. "இவர்கள் எல்லோரும் சுக்ரீவனுக்கு ஒப்பானவர்கள். இன்னும் இவர்களைப்போல் கோடிக்கணக்கானவர்கள் காணப்படுகின்றனர். அவர்களை எண்ணவோ, பலத்தைக் கணக்கிடவோ, ஒருவராலும் முடியாது. ஸ்ரீ ராமசந்திர பிரபுவின் கிருபையினால் மிகுதியான வீரம், பராக்ரமம், பௌருஷம் நிறைந்தவர்கள். அவர்கள் மூவுலகங்களையும் புல்லுக்குச் சமமாகக் கருதுகின்றனர்."

541-542. "பத்துத் தலையுடைய எம் தலைவ! பதினெட்டு பத்மம் வானர சேனாதிபதிகள் திரண்டு உள்ளனர் என்று நான் காதால் கேட்டேன். தங்களால் போர்க்களத்தில் வெல்லக்கூடிய ஒரு இழிவான குரங்குகூட அச்சைன்யத்தில் கிடையாது."

543-546. "அதிக கோபத்துடன் வானரச் சைன்யங்கள் எல்லாம் தங்கள் கைகளினால் கலக்கியே ஸமுத்திரத்திலுள்ள ஜலத்தை வற்றச்செய்து விடுவார்கள். ஆனால் அதற்கு ஸ்ரீ ரகுவீரனின்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

கட்டளையில்லை. "பெரிய பெரிய திமிங்கிலங்கள், பாம்புகள் நிறைந்த ஸமுத்திரத்தை மலைகளைப் பெயர்த்து நிறைத்துவிடுவோம். இராவணனை அறைந்து தரையில் தேய்த்துவிடுவோம்" என்று பலவிதமாக அட்டஹாஸம் செய்து ஆர்ப்பரிக்கின்றனர் அனைவரும் இலங்கையை விழுங்க விரும்புவதுபோல இயற்கையான வீரத்துடன் ஸிம்ஹ கர்ஜனை புரிகின்றனர்.

547. "அதிலுள்ள வானரமோ, கரடியோ உண்மையிலேயே சுத்த வீரர்கள். ஸ்ரீரகுநாயகன் தலைமைதாங்குவது இன்னும் அவர்களது வீரத்தைப் பன்மடங்கு பெருக்குகிறது. ஹே இராவணா! கோடிக்கணக்கான இயம தர்மராஜர்களைக்கூட அவர்கள் சுலபமாக ஜெயித்து விடுவார்கள்."

548-549. "ஸ்ரீராமரது தேஜஸ், அழகு, பலம், புத்தி சாதுர்யம், முதலியவற்றை ஆயிரம் நாபடைத்த ஆதி சேஷனாலும் வருணிக்கமுடியாது. நூற்றுக்கணக்கான ஆழ்கடல்களை அரை நொடியில் ஒரே பாணத்தினால் வற்றச்செய்யும் ஆற்றலுடைய ஸ்ரீ ரகுராமர் தர்ம நியாயத்தைப் பின் பற்றித் தங்கள் தம்பியிடம் "எவ்விதம் கடலைத் தாண்டலாம்?" எனக்கேட்டார்"

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

550-551. "அதற்கு விபீஷணர் கூறிய பதிலைக் கேட்டுச் சமுத்திரக் கரையில் பாதையை நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார். காரணம், ஸ்ரீராகவனது கருணையுள்ளமே" என்றான். அதனைக் கேட்ட இராவணன் சிரித்துக்கொண்டே "இப்படி உங்களுக்குப் புத்தி தோன்றுமானால் ஏன் அவர்களுடனேயே நீங்களும் சேர்ந்துகொள்ளக் கூடாது" என அதட்டினான்.

552-553. "இயற்கையிலேயே நடுநடுங்கும் ஸ்வபாவமுள்ள விபீஷணனுடைய வார்த்தைகளில் நம்பிக்கையுடன் வந்து சமுத்திரத்துடன் போரிட வந்துள்ளனர்! அடமூடனே! நீயா இப்படிப்பட்ட கோழைகளான எதிரிகளின் பெருமையைக் கூறுகின்றாய்! இதனாலேயே நான் பகைவரின் அறிவு ஆண்மை முதலியவற்றை அறிந்தேன்."

554-555. "கோழையான விபீஷணன் எப்பகைவனுக்கு மந்திரியோ அவனுக்கு வெற்றியோ புகழோ ஏது?" என்று மேலும் எள்ளி நகையாடினான். உடனே கோபங்கொண்ட ஒற்றர்கள் இலக்ஷ்மணப் பெருமாள் தந்த திருமுகத்தைக் கொடுத்தனர்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

556–557. "தலைவனே! இராமமூர்த்தியின் தம்பி ஸ்ரீ லக்ஷ்மணர் இந்தத் திருமுகத்தைத் தங்களுக்கு அனுப்பினர். இதனைப் படித்துணர்ந்து ஆராய்ந்து தங்கள் மனதை அமைதியாக்கிக் கொள்ளுங்கள்" எனக்கூறினர் தூதுவர். இராவணன் அசட்டுச் சிரிப்புடன் அவமரியாதையைக் காட்டத் தன் இடது கையினுல் அலக்ஷியமாக வாங்கித் தன் மந்திரியிடம் கொடுத்துப் படிக்கக் கட்டளையிட்டான்.

558-559. "அட அறிவில்லாதவனே! நீ உன்னைப் பெருமையாக எண்ணி அகம்பாவங் கொண்டு உன் குலத்தையே அழித்துவிடாதே. ஸ்ரீ ராமரின் பகைமையை மால் அயன், அரன் ஆகிய மும்மூர்த்திகளின் காலடிகளில் வீழுந்து வேண்டினுலும் போக்கமுடியாது. உன் தம்பி விபீஷணனைப் போல் அகங்காரத்தை விட்டொழித்து ஸ்ரீ ராமசந்திரனின் திருவடித் தாமரைகளைச் சரண் அடையும் வண்டுபோல் வந்தடைந்தால் அப்பகையை நீக்கிக்கொள்ளலாம். அட மூர்க்க! பிரபுவின் பாணரூபியான நெருப்பில் விட்டில் பூச்சிகள்போல் உற்ருர் உறவினருடன் அழிந்துபோகாதே." என்று எழுதியிருப்பதைப் படித்தான், மந்திரி.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

560-561. அதனைக் கேட்கக் கேட்க இராவணனுக்கு மனதில் மிகுதியான பயம் உண்டாகியது. ஆனால் வெளிப்படுத்தாமல் சிரித்துக் கொண்டே "மரவுரிதாங்கிய ராமன் தரையிலிருந்து கொண்டு ஆகாயத்தைப் பிடிக்க முயல்கின்றான். அதாவது தான் ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டு காடுமலைகளில் அலைந்து திரிந்து மற்றவர்களுக்கு அரசைத் தானம் வழங்குகின்றான். அண்ணன் நிலை இவ்வாறிருக்க இளையோன் பிதற்றல் எப்படியிருக்கிறது?" என்று நகைத்து அனைவரையும் நோக்கிக் கூறினான்.

562-563. சுகன் "ஹே ப்ரபுவே! தாங்கள் தற்பெருமையை நீக்கி மனதில் திர ஆராயுங்கள். இதுவே உண்மை. சினம் சிதைத்துச் சிறிது கவனத்துடன் என் வார்த்தைகளைக் கேளுங்கள். பிரபுவுடன் விரோதம் கொள்ளவேண்டாம்" என்றான்.

564-565. "ஸ்ரீ ஜெயராமன் உலகமனைத்திற்கும் யஜமானர். இருந்தாலும் அவருடைய மனம் மிகவும் கருணை நிறைந்தது. ஸ்ரீ ராமனைத் தாங்கள் சரண் அடைந்ததுமே தங்களிடம் பேரன்பு காட்டி

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

நீங்கள் செய்த தவறுகளில் ஒன்றுகூட மனதால் சிந்திக்கமாட்டார்."

566-567. "எம் இறைவனே! ஸ்ரீ ஜானகி தேவியை பிரபு ஸ்ரீ ராகவனிடம் ஒப்புவிக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் நிறைவேற்றுங்கள்" என ஆதரவுடன் பணிந்து தெரிவித்தான், சுகன். "ஜானகி மாதாவை ஸ்ரீ ராமனிடம் ஒப்படைக்க வேண்டும்" எனக் கூறியதுமே கண்களில் தீப் பொறி பறக்க. "அட அயோக்கியப்பயலே! என் முன்னிருந்து நீங்கிவிடுக" என்று அதட்டினான்.

568-569. உடனே சுகன் இராவணனை வணங்கிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீ ராகவன் இருக்குமிடம் அடைந்து சாஷ்டாங்கமாகப் பிரபுவை வணங்கி நிகழ்ந்ததைக் கூறி ஸ்ரீ ராமரின் பரமானுக்ரஹத்தைப் பெற்றுத் தன் உயர் பதவி பெற்றான்.

570-571. சிவபெருமான், ஹே உமாதேவி, சுகன் என்னும் இவ்வரக்கன் முன்பு பெரிய ஞானி. அகஸ்த்ய முனிவருடைய சாபத்தால் இவ்விதம் ஆனான். அவன் ஸ்ரீ ரகுநாதரைப் பன்முறை வணங்கித் தன் உண்மை வடிவங்கொண்டு தன் ஆசிரமத்தையடைந்தான்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

572-576, மூன்று இராத்திரிகளை ஸ்ரீ ராகவன் ஸமுத்திர தீரத்தில் தர்பசயனத்தில் கழித்தார். ஆனால் ஸமுத்திரராஜா பிரபுவின் வேண்டுகோளை மதிக்கவில்லை. அப்பொழுது ஸ்ரீ ராகவன் சிறிது கோபத்தை வரவழைத்துக்கொண்டு, "பயம் ஏற்படாவிடில் பிரீதி உண்டாவதில்லை. ஹே இலக்ஷ்மண! கோதண்டத்தையும் பாணத்தையும் எடுத்துவா. அக்னியஸ்திரத்தால் இச் சமுத்திரத்தை வற்ற அடித்துவிடுகிறேன். முட்டாளிடம் விநயம் காட்டல், வஞ்சகனிடத்தில் அன்பு செலுத்தல், கஞ்சனிடம் உயர் அறங்களின் பெருமைகளைக் கூறுவது, மதமோஹம் நிறைந்தவனிடம் மஹா ஞானிகளின் வரலாற்றை வருணித்தல், மஹா லோபியிடம் வைராக்யத்தை விவரிப்பது, கோபம் நிறைந்தவனிடம் இந்திரியங்களை அடக்கும் முறைகளை எடுத்து இயம்பல், காமுகர்களிடம் ஸ்ரீ ஹரியின் கதைகளை உபன்யாசம் செய்வது, உவர் நிலத்தில் உயர் விதைகளை விதைப்பதுபோல் யாதொரு பயனையும் கொடுக்காது என்றார் தாசரதி.

577-578. இவ்விதம் திருவாய்மலர்ந்தருளிக்கொண்டே கோதண்டத்தை வளைத்து அக்னியஸ்த்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

திரம் பிரயோகம் செய்தார் ஸ்ரீ ரகுவீரன். இது ஸ்ரீ லக்ஷ்மணஸ்வாமிக்கு மிகவும் ஆனந்தத்தை அளித்தது. இங்ஙனம் பிரபுவினால் ஏவப்பட்ட கொடிய பாணம் பிரயோகிக்கப்பட்டவுடன் ஸமுத்திரத்தின் நடுவில் பெரிய நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது.

579-580. பெரிய மீன்கள், பாம்புகள் முதலிய நீர்வாழ் பிராணிகள் கலக்கம் அடைந்தன. ஸமுத்திரராஜா அவைகள் இவ்விதம் நெருப்பினால் அழிவதைக் கண்டவுடனேயே நடுநடுங்கி, ஸுவர்ணத்தட்டில் பலவிதமான நவரத்னங்களை நிரப்பிக்கொண்டு, தன் கர்வத்தைத் தள்ளிவிட்டு பிராம்மண வடிவத்தில் பிரபுவின் முன் வந்து அடைந்தான்.

581. இதனை வைநதேயனுக்கு கூறும் காகபுசுண்ட மஹாமுனிவர், "ஹே பக்ஷிராஜனே! வாழைகள் எவ்வளவு தண்ணீர் பாய்ச்சினாலும் பலன் கொடுக்கா. ஆனால் கொத்திக்கொடுத்தவுடன் பலிதம்தர ஆரம்பித்துவிடும். அதுபோல் அற்பன் பிரார்த்தனையைக் கேட்கமாட்டான். அதட்டி மிரட்ட ஆரம்பித்தவுடன் கேட்பான்" என்றார்.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

582-583. ஸமுத்திரராஜா பயபக்தியுடன் அயோத்தியாதிபதியின் திருவடிக் கமலங்களை உறுதியாகப் பிடித்துக்கொண்டே, "என் தலைவனே! எனது தீய குணங்களை நாசம் செய்து அனுக்ரஹம் செய்யுங்கள். என் பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுங்கள். ஆகாயம், காற்று, நெருப்பு, தண்ணீர், மண் ஆகிய பஞ்ச பூதங்களின் இயற்கை ஸ்வபாவம் ஜடத்தன்மை."

584-585. "தங்களது உத்திரவினாலே மாயை இவ்வைந்து பூதங்களையும் சிருஷ்டித்திருக்கிறது என எல்லா சாஸ்திரங்களும் கூறுகின்றன. பிரபுவின் ஆக்ஞையின்படி அவை அவை இருக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன."

586-589. "பிரபுவே! என்னைத் தண்டித்தது மிக மிக நல்லதே. என் மரியாதையும் தங்களாலேயே நிலை நிறுத்தப்பட்டது. பேரிகைகள், இடையன், சூத்ரன், பசு, பெண்கள் இவர்கள் (தண்டிக்க) அடிக்கத் தகுந்தவர்கள். ஸ்வாமியின் பராக்ரமத்தினால் நான் வற்றிவிடுவேன், சேனைகள் சுலபமாகக் கடந்து செல்லலாம். ஆனால் இதில் எனக்குப் பெருமையில்லை. வேதங்களால் கானம்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

செய்யப்பட்ட தங்களது ஆக்ஞைகள் தவிர்க்க முடியாதவை. எனவே தங்கள் விருப்பம்போல் நடக்கலாம்.'' என்றான்.

590. ஸமுத்திரவேந்தனின் விநயமான வசனங்களைக் கேட்ட பரமதயாளுவான ஸ்ரீரகுவீரன், "வேந்தே! நம் சேனைகள் எவ்வுபாயத்தால் இதனைத் தாண்டிச்செல்லலாமோ அவ்வுபாயத்தைச் 'செய்க' எனக் கட்டளையிட்டனர்.

591-594. "ஹே பிரபு! நீலன், நளன் என்ற இருவானரவீரர்கள் இளமைப்பருவத்திலே பெற்ற மஹரிஷிகளின் ஆசீர்வாதங்களாலும் தங்கள் மஹிமையினாலும் அவர்கள் தொட்ட பொருள்கள், மலைகள் எல்லாம் ஆழமான நீர் நிலைகளில் போடப்பட்டால் மிதக்கும். அவர்களை அவ்விதமே செய்ய ஆக்ஞாபியுங்கள். நானும் தங்களிடம் வைத்த பரம பக்தியை மனதிற்கொண்டு உதவி செய்கிறேன். இவ்விதம் ஸமுத்திரத்தில் பெரிய பாலம் அமைக்கலாம். அதன் பெருமையும் மூவுலகிலும் பரவிவிடும்.''

595-596. "ஹே நாத! இதே பாணத்தினால் பாபங்களின் திரளுருவங்களாகத் திகழும் அக்

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

கரையிலுள்ள துஷ்ட ராக்ஷஸர்களை ஸம்ஹாரம் செய்யுங்கள்" எனப் பணிவுடன் கூறினன். இதைக் கேட்ட கருணாநிதி ரணதீரன் ஸ்ரீராகவன் உடனேயே சமுத்திரராஜாவின் துன்பத்தைப்போக்கியருளினார்.

597-598. ஸ்ரீ ராமச்சந்திரனின் ஒப்பற்ற பலம் பராக்ரமம், பௌருஷம், காருண்யம், முதலியன கண்டு சமுத்திரராஜா மனம் மிக மகிழ்ந்தான். துருமகுல்யத்தில் வாழும் துஷ்டர்களினால் சமுத்திரத்தில் பல தடவை பாலம் கட்ட முயற்சித்த வரலாறுகளை விரிவாகக் கூறி ஸ்ரீராமன் திருவடிகளை நமஸ்கரித்துச் சென்றான், அவ்வரசன்.

599. ஸமுத்திரராஜாவாகிய வருணதேவனும் தன் ஸ்தானத்திற்குப் போய்ச்சேர்ந்தான். இதுவே ஸ்ரீரகுவீரன் மனத்திற்கு மிகவும் சந்தோஷமளித்தது. இக்கலியுகத்தில் தோன்றிய மக்கள் எல்லாருடைய பல பிறவிகளில் செய்த பெரும் பாப சமூஹங்களைப் போக்கக்கூடிய ஸ்ரீராம சரிதத்தை ஸ்ரீ துளஸிதாஸர் தன் அறிவுக்கெட்டியபடி பாடியிருக்கின்றார். ஸ்ரீரகுநாதருடைய குணகணங்கள், பேரின்ப நிலையங்கள். சந்தேஹங்களை அகற்றித் துன்பங்களைப் போக்கக்கூடியவை. பரம பரிசுத்த

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

மான மனமுடைய பண்டிதர் பாமரர்கள் அனைவரும் பக்தி சிரத்தையுடன் ஆசாபாசங்களை அகற்றி அனுதினமும் இடைவிடாமல் இந்த ஸ்ரீ ஹரிகதையினைப் பாராயணம் செய்தும் சிரவணம் செய்தும் வருகின்றனர்.

600. ஸ்ரீ ரகுநாதரின் குணங்களைப் பக்தி பரவசத்துடன் பாடித் துதிப்பது பரிபூர்ணமான ஆநந்தமயமான இன்பம் தரக்கூடியது. இக் கதையினை பக்தி சிரத்தையுடன் சிரவணம் செய்தால் அவர்கள் தெப்பக்கட்டையில்லாமலேயே சம்சாரக்கடலைத்தாண்டி பேரின்பம் அடைவார்கள்.

ஸ்ரீ துளஸிதாஸரால் இயற்றிய
ஸ்ரீராமசரிதமானஸம் என்ற ஸகல பாபங்களை
போக்கிச் சுத்தஞானத்தையருளும் பெயருடைய
சுந்தரகாண்டமென்ற ஐந்தாவது ஸோபானம்
முடிவுற்றது.

ஸ்ரீ ஸீதா ராமசந்திரார்ப்பணமஸ்து.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

பிரார்த்தனைத் திருப்புகழ்.

நாத விந்துக லாதீ நமோ நம
  வேத மந்த்ரசொ ரூபா நமோ நம
  ஞான பண்டித ஸ்வாமீ நமோ நம வெகு கோடி
நாம சம்புகு மாரா நமோநம
  போக அந்தரி பாலா நமோ நம
  நாக பந்தம யூரா நமோ நம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோ நம
  கீத கிண்கிணி பாதா நமோ நம
  தீர சம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோ நம
  தூய அம்பல லீலா நமோ நம
  தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்
ஈத லும்பல கோலா லபூஜையும்
  ஓத லும் குண ஆசார நீதியும்
  ஈர மும்குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்த லம் புகழ் காவேரி யால்விளை
  சோழ மண்டல மீதே மனோகர
  ராஜ கம்பீர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
  சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
  ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

Central Sanskrit University CENTRAL LIBRARY 25817

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந ஞடதில்
ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

சாந்தி

1. ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணி பெறில் அதுவே சாந்தி
முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகும் செயல் பெறில் அதுவே சாந்தி
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றென நின்றதுவே சாந்தி
ஆசாநிகளந் துகளாயின பின்
பேசா அனுபூதி பிறக்கும் இதுவே சாந்தி

2. முன்னும் பின்னும் நின்று காப்பான்
பன்னிரு கையன் பாலன் வேலன்
முன்பு வந்து என்ன என்றே கேட்பன்—
பற்றுடன்
முருகா ! முருகா ! என்றே உருகு.

ஓம் முருகா மால் மருகா வேல் முருகா ஓம் !
ஓம் முருகா மால் மருகா வேல் முருகா ! ஓம் !

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

CENTRAL SANSKRIT UNIVERSITY
RAJIV GANDHI CAMPUS, SRINGERI LIBRARY
DATE DUE SLIP

Call No. ....

Accession No. ......25817......

This book should be returned to the library on or before the date last stamped, otherwise overdue charges Re.1/- per day shall be charged.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri

CC-0. In Public Domain. Digitization by eGangotri. Funding MIDF

இலவச விளம்பரம்

“ ஸ்ரீசங்கர க்ருபா ”

[ஓர் மாதப் பத்திரிகை]

இப்பத்திரிகை ஸ்ரீ ஜகத்குரு சிருங்ககிரி ஸ்ரீமஹா ஸந்நிதானம் அவர்களின் அநுக்ரஹத்துடன் அகில பாரத சங்கர ஸேவா ஸமிதியால் வெளியிடப்பட்டு வருகிறது. 3, ஆண்டுகள் பூர்த்தியாகி சுபகிருத் ஆடியில் நான்காவது ஆண்டு ஆரம்பமாகிறது. வருஷச்சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100. “K. திருமலைஸ்வாமி அய்யர், B. A. B. E. (Retd Supdtg Engineer) மானேஜர் ‘ஸ்ரீசங்கர க்ருபா’ 16, சேஷபுரம், தென்னூர், திருச்சி” என்ற விலாஸத்திற்கு பணம் அனுப்பி சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளலாம்.

“ ஸ்ரீ ஜகத்குரு க்ரந்தமாலா ”

ஸ்ரீசங்கராசார்யாருடைய ஸ்தோத்திரங்களும் பிரகரணங்களும் நாகரியிலும் தமிழிலும் மூலமும் பதவுரை விரிவுரைகளுடன் கூடியது. 40 பாகங்கள் கொண்டது. மொத்தம் விலை ரூ. 50. ஆறு பாகங்கள் வெளிவந்து விட்டன. ஸ்வல்ப பிரதிகளே அச்சிடுவதால் உடனே ரூ. 50 அனுப்பி தங்கள் பெயரை பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறோம்.

K. V. சுப்பரத்னம் அய்யர்,
பொது காரியதரிசி,
அகில பாரத சங்கர ஸேவா ஸமிதி,
18, சத்யமூர்த்தி தெரு, ஈரோடு.

CSU-Sringeri Campus Rare Book and Manuscript Collection, Sringeri